# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆடி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 28-ம் இலக்கம்


# அவஸ்தைப்பூசுதல் பெற்றவள் லூர்துபதியில் அற்புதமாகக் குணமடைந்தாள்

பாரிசவாதம் கண்டுவருந்திய மேரிவொன் மொந்தினிஎன்ற 28 வயதுடைய ஓர்குடும்பஸ்திரியின் லூர்துபதிப்பிரயாணத்துக்கு வேண்டியசெலவுபணத்தை மூடவர்கள் இருவர்சேர்ந்து சேகரித்துக் கொடுத்தார்கள். ஆனால், அங்குசெல்ல மனப்படாத அவளோ "எனதுவீட்டிலேயே என்னைச்சாகவிடுங்கள்; இந்தப் பிரயாணத்தைச்செய்ய நான் அதிகம்பலவீனமுடையவளாய் இருக்கிறேன்" என்று ஒரேசொல்லாய்ச் சொல்லிவிட்டாள். அவளின்நிலைமைகண்டு அவஸ்தைப்பூசுதலும் அவளுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது.

ஆனால், பப்ரிஸ்ற்என்ற அவள் கணவனோ தனதுமனைவியின் அபாயகரமானநிலைமையைப் பறுவாய்பண்ணாது அவள் பிரயாணஞ்செய்யத்தான் வேண்டுமென்று ஒரேபிடிவாதமாய் நின்று அவளை லூர்துபதி கொண்டுபோய்ச்சேர்த்தான். அத்திருசேத்திரத்தில் ஒருகால் அவள் எவ்வளவோ மறுத்துரைத்தும் கேளாது திருக்கெபிக்கு அவளைக் கொண்டுசென்றான். அற்புத நீரூற்றின் சலத்தைப் பருகிச் சில செக்கன்களுக்கிடையிலே அவளுடையவிரல்களும், புசங்களும், கால்களும்அசைந்தன. எல்லோருங்காண அற்புதவிதமாக அவள்குணமடைந்து தன்னைக்கிடத்தியிருந்த தூக்குங் கட்டிலினின்றும் வெளியேகுதித்தாள்.

தென்பிரான்ஸிலே பிவர்எனும் கிராமத்தைச்சேர்ந்த திருமதி மொந்தினி நீடிய நோய்ச் சரிதையைக் கொண்டுள்ளவள். ஓர்முறை உண்டுபட்ட மூளைக்காய்ச்சல் அவளுக்குக் காலந்தோறும் புத்திமாறுட்டத்தை உண்டு பண்ணிவந்தது. ஈற்றில், நவமாகக் கண்டுபிடித்த ஓர்மருந்தை உபயோகித்துச் சிகிச்சைசெய்த பின்னரே அவள்சுகமடைந்தாள். அதன்மேல் அவள் பப்ரிஸ்ற்றை மணஞ்செய்து ஊக்கமுள்ள ஓர் உத்தமபெண்ணாகவும், மனோதிருப்தியுடைய ஓர்மனைவியாகவும் வாழ்ந்திருந்தாள்.

அவ்வாறாக, ஒருசிலமாதங்களின்முன் அவள் நோய்கண்டாள். டக்றர்மார் அவளைப்பரிசோதித்துவிட்டு, மூளைக்குச்செல்லும் நரம்புஒன்று தொழிற்படவில்லையென்றும், மூளையின்ஒரு பகுதியும் சிதையத்தொடங்கிவிட்டதென்றும் கண்டுபிடித்தார்கள். பின்னர் பாரிசவாதம் உண்டாயிற்று. அவளுக்குண்டான நோய் தீராத நோயென்று தீர்மானிக்கப்பட்டது.

அப்போது நோயாளருக்குரிய கத்தோலிக்கசங்கத்தின் அங்கத்தவர்களான அந்தக்கிராமத்தைச் சேர்ந்த இருமூடவர்கள் ஒன்றுசேர்ந்து இத்தம்பதிகளுக்கு உதவிசெய்ய முயற்சிக்கவேண்டுமெனத் தீர்மானித்தார்கள். வீடுகள்தோறுஞ்சென்று பரிந்துபேசி நிதிசேகரித்தார்கள். நோயாளிக்குவேண்டிய வசதிகளைச்செய்யுமாறு லூர்துபதியிலுள்ள வைத்திய அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார்கள்.

வண. கஸாக்னிசுவாமியார் நோயாளிக்கு அவஸ்தைப்பூசுதல் கொடுத்து வீட்டினின்றும் வெளிகொள்ளும்போது மூடவர்கள் இருவரும் தாங்கள்செய்துள்ள ஏற்பாடுகள்பற்றிய செய்தியைத் தெரிவிக்க அங்குபோய்ச்சேர்ந்தார்கள். காலம்அதிகம்கடந்து போய்விட்டதாக அவர்களுக்குத் தோன்றியது. நோயாளிதானும் பிரயாணஞ்செய்வதில் ஆர்வங்கொண்டவளாய்க் காணப்படவில்லை.

திருக்கெபியிலே அவள்கணவனான பப்ரிஸ்ற் அற்புதநீரூற்றுத் தண்ணீர்க் குப்பிஒன்றைத் தனது மனைவியின் உதடுகளில்வைத்துப் பிடித்துக்கொண்டான். அவளும் வாயைக்கோணிக்கொண்டு தண்ணீரைவிழுங்கினாள். அப்போது திடீரென ஓர் மாற்றம் ஏற்படத்தொடங்கியது. "எழும்ப எனக்குத்துணைச்செய்யுங்கள்" என்று ஓலமிட்டாள். பப்ரிஸ்ற்றின்மேல் சாய்ந்தபடியே சிலஅடிகள் எடுத்துவைத்து நடந்தாள். அதன்மேல் மகாதேவாலயபடிகளின்மேலாகப் பெரியபலிபீடத்தைநோக்கி ஓடத்தொடங்கிப் பீடத்தைச்சேர்ந்து அங்கேசட்டென முழந்தாட்படியிட்டுநின்றாள்.

ஐந்துதினங்களின்பின் அவள் தனக்குஅவஸ்தைப்பூசுதல் கொடுத்த வண. கஸாக்னிசுவாமியாரைச்சந்தித்து வாழ்த்துக்கூறினாள். அப்போதுஅவர் "இது ஆகக்கூடியதன்று; ஒருவாரத்தின்முன்னரே நான் உனக்கு அவஸ்தைப்பூசுதல்கொடுத்தேனே" என்று அதிசயத்துடன் கூறினார்.

# சுதேச வர்த்தமானம்

## தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கம்

தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தினர் கொழும்பிலே நடத்திவரும் நாவலர்கழகம் மேலும்சிலவகுப்புகளை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. விஞ்ஞானத்தின் பல்வேறுபகுதிகளிலும் பயிற்சிஅளிப்பதற்கான விஞ்ஞானகூடங்கள் அமைக்கப்பட்டுத் தளபாடங்களும் பெறப்பட்டுள்ளன. போதனாசிரியர்களுக்கும் இப்போது சம்பளம் கொடுக்கப்படுகிறது. பட்டதாரிகள்பலர் பயிற்சியளித்துவருகின்றார்கள்.

---

## முதற்பூசையும் வரவேற்பும்

ரோமாபுரியிலே வேதசாஸ்திரங்கற்றுச் சென்ற மார்கழிமாதம்20-ந்திகதியன்று குருப்பட்டம்பெற்றவரும், அமலோற்பவ மரியநாயகிசபைக்குரவரும், மேஸ்திரியார் என். பி. மாணிக்கத்தம்பிஅவர்களின் மூன்றாவதுபுதல்வருமான வண. பிலிப்அன்ரனிப்பிள்ளை O.M.I. சுவாமியவர்கள் தமதுஜனனபதி வந்துசேர்ந்து அடுத்துநிகழும் ஆவணி மாதம்1-ந்திகதி சனிக்கிழமைகாலை 7-30மணிக்கு யாழ்ப்பாணத்திலே முதன்முறையாகப் பரிசுத்தபுதுமை மாதாகோவிலில் பெரியபாடற்பூசை நிறைவேற்றவிருக்கின்றார். அதன்மேல் அன்றுபிற்பகல் கோவில்மைதானத்திலே அவர்தந்தையார் தம்முடைய குருபுதல்வருக்கு ஓர்பகிரங்கவரவேற்பு உபசாரம்நிகழ்த்துவார்.

---

## அரசாங்க ஊழியருக்குக்கடன்

1957-ம்ஆண்டு தைமாதத்துக்கும், 1958-ம்ஆண்டு புரட்டாசிமாதத்துக்குமிடையிலே அரசாங்கஊழியர்களுக்குக்கடனாகவும், சம்பளமுற்பணமாகவும் அரசாங்கம் நாலரைக்கோடிரூபா வழங்கியிருக்கின்றது. இதில் திருவிழாமுற்பணமாகவே பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. குறித்த 21மாதங்களிலும் கார்கள்வாங்குவதற்கென்று 80லட்சம்ரூபாவுக்குமேலும், மோட்டார்சைக்கிள், பைசிக்கிள்வாங்குவதற்கு 35லட்சம்ரூபாவும் கொடுபட்டுள்ளது.

## ஒன்றேகால் லட்சம் ரூபா நஷ்டம்

வடபகுதியிலே பதின்மூன்று தினங்களாக நடைபெற்ற பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாகச் சுமார் ஒன்றேகால் லட்சம்ரூபா சம்பளப் பணத்தைப் பஸ்தொழிலாளர் இழந்துவிட்டனர். எஞ்ஜினியறிங் பிரிவு உட்பட ஆயிரம்பேர்வரை இந்தவேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

## திரிகோணமலையில் பெற்றோல்ஆலை

இலங்கையிலே எண்ணெய்சுத்திகரிக்கும் ஆலைஒன்றை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் பூர்த்தியடையும்போல் இருக்கிறது. இந்தஆலை திரிகோணமலையில், கோடி பவுண்முதல் 1கோடியே 20லட்சம் பவுண்வரையிலுள்ள மூலதனத்துடன் நிறுவப்படவிருக்கிறது. இந்தஆலையை அமைப்பதன்சம்பந்தமாய் ஆங்கிலோ–அமெரிக்க எண்ணெய்க்கம்பெனிகள் கைத்தொழில்மந்திரி காரியாலயத்துடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கின்றன. இலங்கையர்களுக்கு நூற்றுக்கு20வீத மூலதனம் அளிக்க இந்தக்கம்பெனிகள் இசைந்திருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால், எண்ணெய்சுத்திகரிக்கும் ஆலையைத் தேசியமயமாக்கப்படாதென்று இந்தக்கம்பெனிகள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றன.

## கல்லூரிகளின் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலே இலங்கையிலுள்ளகல்லூரிகளின் பந்தையவிளையாட்டுச்சங்க தலைவரான சங். பிறதர் அத்தனாசியஸ்அவர்களின் ஆதரவிலே வடபகுதியின் இரண்டாவதுகுழுவைச் சேர்ந்த கல்லூரிகளின்விளையாட்டுப் போட்டி நாளை 24-ந்திகதி வெள்ளிக்கிழமையும், மறுநாள்25-ந்திகதிசனிக்கிழமையும் நடைபெறவிருக்கின்றது. பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி, இளவாலை, அர்ச். என்றியரசர்கல்லூரி, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம், சென் ஜோண்ஸ்கல்லூரி, யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரி, வதிரி, திருஇருதயநாதர்கல்லூரி, ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார்கல்லூரி, அனுராதபுரம், அர்ச். சூசையப்பர் கல்லூரி ஆகியஎட்டுக்கல்லூரிகளும் இப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கின்றன.

வடஇலங்கை

# ஆசிரிய கலாசாலைகளின் கைப்பந்தாட்ட முடிவு

## கொழும்புத்துறை ஆசிரியகலாசாலைக்கு வெற்றிக்கேடயம்

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட கோஷ்டிகளனைத்தையும் தோற்கடித்து வெற்றிக்குமேல் வெற்றியீட்டி வந்த கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர் ஆசிரியகலா சாலைக் கைப்பந்தாட்டக் கோஷ்டி சென்ற 4-ந்திகதியன்று நடைபெற்ற சம்பியன்போட்டியில் திருநெல்வேலி, சைவாசிரியகலா சாலைக் கைப்பந்தாட்டக்கோஷ்டியைத் தோற்கடித்தது.

கொழும்புத்துறை, ஆசிரியகலாசாலை மைதானத்தில் நடைபெற்ற இவ்விறுதிப் போட்டியினைக்காண ஆசிரியகலாசாலைகளைச்சேர்ந்த பெருந்திரளான மாணவர்கள்திரண்டிருந்தார்கள். வடபகுதிஉடற்பயிற்சி வித்தியாதிகாரி திரு. டி இராசேந்திரா, நல்லூர், ஆசிரியகலாசாலை அதிபர் திரு.ஜே.ஜி. அரசரத்தினம், திருநெல்வேலி, ஆசிரியகலாசாலை அதிபர் திரு. கே. கந்தையா, கொழும்புத்துறை ஆசிரியகலாசாலை அதிபர் வண. பி. தியோகுப்பிள்ளை சுவாமிகள் உட்படப் பலபிரமுகர்கள் விசேட பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர்.

போட்டி ஆரம்பமானதும் இரு கோஷ்டிகளும் வெகுதுரிதமாகவிளையாடினை. நீண்டநேரமாகநடைபெற்ற இவ்வாட்டத்தில் திருநெல்வேலிக் கோஷ்டிதனதுபூரணதிறமையுங்காட்டி விளையாடியது. பலத்தபோட்டியின் பின் இவ்வாட்டத்தில் திருநெல்வேலிக் கோஷ்டி 15: 11புள்ளிகளால் வெற்றியீட்டியது.

இரண்டாவதுஆட்டம்வெகுகவர்ச்சிகரமாக இருந்தது. திருநெல்வேலிக் கோஷ்டி வெகுதுரிதமாகவிளையாடி வெற்றியீட்ட முயன்றதெனினும் கொழும்புத்துறைக்கோஷ்டி துரிதமாக விளையாடி அதன்முயற்சிகளனைத்தையும்முறியடித்து வெற்றிபெற்றது. இவ்வாட்டத்தில் கொழும்புத்துறைக் கோஷ்டி 15புள்ளிகளையும், திருநெல்வேலிக்கோஷ்டி 3புள்ளிகளையும் பெற்றது.

மூன்றுவதாட்டம் ஆரம்பமானதும் இருதரப்பினரும் வெகுதீவிரமாகவிளையாடினர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காது வெகுநேரம்வரை இரு கோஷ்டிகளும் விளையாடியமை பார்வையாளர்களைப் பெரிதும்கவர்ந்தது. கொழும்புத்துறைக் கோஷ்டி வீரர்களின்திறமை இவ்வாட்டத்தில் நன்கு பிரகாசித்தது. திருநெல்வேலிக் கோஷ்டி தீவிரமாகவிளையாடி வெற்றியீட்ட முயன்றதெனினும் அதன்முயற்சிகளனைத்தும் பயனற்றுப்போய்விட்டன. இறுதியில் கொழும்புத்துறைக் கோஷ்டி 15: 6புள்ளிகளால் திருநெல்வேலிக்கோஷ்டியைத் தோற்கடித்தது.

அன்றுநடைபெற்ற இறுதிப்போட்டியில் வடஇலங்கை ஆசிரியகலாசாலைகளின் கைப்பந்தாட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர் ஆசிரியகலா சாலைக் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கான சம்பியன்வெற்றிக்கேடயம் அண்மையில் நடைபெறவிருக்கும் ஆசிரிய கலாசாலைகளின் விளையாட்டுப்போட்டிப் பரிசளிப்புவிழாவில் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

—(—)—

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**நற்கருணை நாதரின் சுற்றுலா:**

தேடிவருவது ஆடிமதி. நற்கருணை நாதர் நமதுஆலயவீதிவழியே எடுத்துச்செல்லப்படும் மாதம்அது. இம்மதி 12-ம்நாள் பலார்பற்றி விடியுமுன்பே நிறைவேறியது. ஞாயிறுவார முதற்பூசை. பாடற்பூசையாகிய இரண்டாம் பூசையின்பின் இயற்கையேயெனச் செயற்கை வெண்ணிறமலர்கள் பச்சிளமஇலைகளுடன் விரவ அலங்கரிக்கப்பெற்ற பலிபீடத்தில் நற்கருணைப் பேழையின்மீது விசுவாசிகளின் ஆராதனைக்காகத் திவ்வியநற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பெற்றது.

அன்றுபகல்முழுவதும் இடையறாது விசுவாசிகள், பத்திச்சபையினர், குருமனையினர், கிளௌன்னி ஆண்பெண்கழகத்தினர், ஆசிரியகலாசாலையினர், அன்பர்களால் திருமணிஆராதனைகள் நடாத்தப்பட்டு வந்தன.

பிற்பகல் 4-30மணி. ஆலயம் திரளானோரைக் கொண்டுவிளங்கியது. அயற்பங்குகளிலுள்ளாரும் சமுகமளித்திருந்தனர். ஆலயமணிகளின் ஆரவாரத்தின் பின் திருச்சிலுவை ஆலயமுன்றிலுக்கு வருகிறது. இதோ! ஒழுக்கெறும்பு நிரையெனும்படி கிளௌனிகழகத்தினர், சஞ்சூசையப்பர்ஸ்தாபன மாணவர்கள், சந்நியாசர்கள், கார்மேல்தாபனக் கன்னியாஸ்திரிகள், பிள்ளைகள், பிரான்சீஸ்கன்சபைக் கன்னியர்கள், பிள்ளைகள், வயோதிபர் சாலைச் சிறியகன்னியாஸ்திரிகள், வயோதிபர்கள், குருப்பிரசாதிகள், விசுவாசிகள் முறையே அணிவகுத்துப் பக்தி, பணிவு, அடக்க ஆசாரத்துடன் செபங்கள், பாடல்களோடு மென்னடையிற்செல்லக் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகள் கண்காணித்துவர, நால்வர் தாங்கிய அழகிய அசையும்பந்தரின்கீழ் மேற்றிராசன விக்கார்ஜெனறல் மிக வண. ஜெறோம் டீசாசுவாமிகள் நற்கருணை நாதரையேந்திவர, வண. எவ். கூனி, வண. எஸ். ஜெயநாதன் சுவாமிகள் வலமிடமாகத்துணைவர, வெண்கொடிகள், தோரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற ஆலயவீதிவழியே பவனி நடந்து ஆலயத்தை அடைந்ததும் "தெதேயும்" என்னும் தேவதோத்திரகீதம் பாடப்பட்டது. அதன்மேல் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பெற்றது.

**பாத்திமா அன்னையின் சுற்றுலா:**

சென்ற வைகாசித்திங்கள் முதல்நாள் தொடக்கம் இன்றுவரை தொடர்ந்து இரவுபகலாக எமதுபங்கினரின் இல்லங்களில் செபமாலை, செபம்வேண்டுதல்கள், பரித்தியாகமுயற்சிகளை ஏற்றுவரும் நம்பரலோக அன்னை யாத்திரைக்கன்னிகை இல்லங்கள்தோறும் நல்வரவேற்பும், பிரியாவிடையும்பெற்று வருவதைக்காண்பது பெருமகிழ்ச்சியே. அதிலும் பலகாலம் பரமனின் அநுமானங்களைப் பெறுவோரும் இதயசுத்தஞ்செய்து, பரலோகநாயகிக்குத் தங்களை அர்ப்பணித்து வருவதைக்காண்பது மட்டற்றமகிழ்வை யூட்டுவதாகும்.

மைந்தர்எம்மைத் தேடிவந்த
அன்னைபாதம் போற்றுவோம்!

— நிருபர்

---

## காவலூர்த் தபால்

**அர்ச். செபஸ்தியார் திருநாள்:**

கரம்பனூரில் கோவில்கொண்டிருக்கும் அர்ச். செபஸ்தியார்திருநாள் சென்ற 4-7-59-இல் நவதினஉற்சவங்களுடன் ஆரம்பமாயின. மாலையிலே செபமாலை, திவ்வியபூசை, சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் நவதினஉற்சவங்கள் நடைபெற்றுவந்தன. இந்நவதினங்களில் திருச்சிமேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. ஆரோக்கியம் சுவாமியவர்களால் ஞானவொடுக்கபோதகஞ் செய்யப்பட்டது. 12-7-59 ஞாயிறுவாரம் வேஸ்பர்என்னும் மாலைஆராதனையுடன் திவ்வியபூசையும, சற்பிரசாத ஆசீர்வாதமும் நிறைவேறி மறுநாள் பாடற்பூசையுடனும், திருச்சுரூபசுற்றுப்பிரகாரத்துடனும் திருநாள்இனிதே நிறைவெய்தியது.

பாடசாலை மாணவர் மாணவிகளின் ஞானவொடுக்கம் கரம்பன், அர்ச். செபஸ்தியார் பெண்பாடசாலையினதும், அர்ச். தெரேசா ஆங்கிலபாடசாலையினதும் மாணவர் மாணவிகளுக்கு 8-7-59 புதன்கிழமை ஆரம்பமாயிற்று. வண. ஆரோக்கியம்சுவாமியவர்களே ஞானவொடுக்க போதகம்செய்தார். ஞானவொடுக்கம் 11-ந்திகதி சனிவாரம் தேவதாயாருக்கு மலர்ச்செண்டுகள் காணிக்கைவைக்கும் வைபவத்துடன் முடிவெய்தியது. திருநாளன்று பாடசாலைமாணவர்கள் பலருக்குமுதன் நன்மை அருளப்பட்டது.

ச. ம. யோ.

# நெடுந்தீவுத் தபால்

நிகழும் ஆடிமாதம் 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை இங்கே தேவநற்கருணைத்திருநாள் அதிபக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. முந்திய தினமாகிய 11-7-59 சனிக்கிழமை நமதுபங்கின் தலையிடமாகிய அர்ச். யுவானியார்கோவில் மலர்களாலும், பலவர்ணமாலைகளாலும் இயற்கையிலும் பார்க்கச் சிறந்தசெயற்கை முறையில் பூலோக மோட்சமோவென்று மக்கள் ஐயுறும்வண்ணம்அலங்கரிக்கப்பட்டது. 12-ந்திகதிகாலை 7-30மணிக்குக் கட்டளைக்குரவர் வண. ஜோண் சிங்கராயர் சுவாமியவர்கள் பாடகர்குழுவின் துணையுடன் பாடற்பூசை நிறைவேற்றினர். பூசையினபோது, அவரால் "மனிதன் நித்தியசீவனை அடையும்பொருட்டுத் தேவன் ஏழுதேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தினர்" என்ற சுலோகத்தைப் பீடிகையாகக்கொண்டு அரியதோர்பிரசங்கம் செய்யப்பட்டது. அதிலே தேவநற்கருணையின் மகத்துவம் என்ன? அதில் வீற்றிருக்கிறவர் யார்? தேவநற்கருணைக்கு எத்துணைஆராதனை செலுத்தவேண்டும்? தேவநற்கருணை ஸ்தாபிக்கப்பட்டிருக்கும கோவில்களிலே நடமாடும்போது எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும்? என்பவைகள்பற்றி இரத்தினச்சுருக்கமாக விளக்கிக்காட்டப்பட்டன.

பிற்பகல் 2மணிக்கு ஆலயமணிகள் ஆர்ப்பரித்து மக்களைவரவழைக்க, அவர்களும பக்திப்பரவசத்தோடு ஏழுகோவில்களிலுமிருந்து ஆலயத்தில்வந்து தேங்கினர்கள். பிற்பகல் 4-30மணிக்கு மாலைஆராதனை பாடிமுடிந்ததும் ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க, ஆசிரியர், கன்னியர் மேற்பார்வையிலே பள்ளிச்சிறுவர் சிறுமிகள் அணிவகுத்துச் செபஞ்செய்து முன்செல்ல. ஒன்பதுபக்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்கள் தத்தம் ஒன்பது கூட்ட விருதுகள்அணிந்து பின்தொடர, பாடகர்குழாம் இனிமையாகக்கீதங்கள்பாடிவரத் தேர்ந்தெடுக்கப்பட்டசிறுமிகள் வெண்ணுடை அணிந்து. மலர்தூவ, நால்வர் மேலாப்பைத் தாங்கிச்செல்ல நடுவேகட்டளைக்குரவர் அன்பின் தேவதிரவிய அநுமானமாகிய அதிபூசித தேவநற்கருணைக் கதிர்ப்பாத்திரத்தைஏந்தித் தோரணங்களாலும், பலவர்ணத்துவசங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியினூடே பவனிசென்றகாட்சி பெருமாட்சியாய் இருந்தது. ஆங்காங்கு பங்குக்கிறீஸ்தவர்களால் அமைக்கப்பட்டிருந்த சிங்காரப்பந்தர்களில் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பெற்றபின் திருப்பவனி கோவிலைஅடைந்ததும கட்டளைக்குரவர் "தெதேயும்" என்ற தேவதோத்திரத்தைத் தொடக்கிவிடச் சகலரும் பக்திஅருட்சியுடன் அதைப்பாடிமுடித்தார்கள். அங்கும் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டுத் திருநாள் இனிதே நிறைவாயிற்று.

ஜே. அந்தோனிப்பிள்ளை

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## இளவாலைக் கல்லூரிப் பரிசளிப்பு விழா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டுத்து மயங்கிஉழலுகின்றார்கள்; இதனையும் தடுத்துநிறுத்தி நல்வழிப்படுத்த வீடும், பாடசாலையும் இணைந்துநிற்றல் அவசியமாகும் என்றார்.

திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா பரிசில்களை வழங்கினர். பிரதமவிருந்தினர் தமது உரையிற் கூறியதாவது: மாணவர்கள் விடாமுயற்சி யுடையவர்களாக விளங்கவேண்டும்; புதியசாதனங்களையும், முறைகளையும்கொண்டு தங்கள் வாழ்வை, கல்வியை, நாட்டைமுன்னேற்ற முன்வரல்வேண்டும்; நமது வாழ்நாளிலே நவமாகஉதித்த இலங்கையின் மூன்றிலொன்றான இஸ்ரேயல்நாடு இயற்கையிலே வரண்ட பிரதேசமாகும்; ஆனால், யூதர்களோ தங்கள் விடாமுயற்சியாலும,விஞ்ஞான அறிவாலும் இயற்கையையும்வென்று அதனைச் செல்வங்கொழிக்கும் நாடாக்கினர்; இன்று வன்மைபெற்று இலங்குகின்றனர்; இந்த நன்மாதிரிகையைப் பின்பற்றி நாமும் நமதுவாழ்வையும், நாட்டையும் நலம்பெறச் செய்யவேண்டுமென்று தெரிவித்து நின்றார்.

ஈற்றில், கல்லூரி மாணவர்களால் நடிக்கப்பெற்ற செகப்பிரியரின் நாடகத்திலிருந்து ஓரங்கமும் 'வாக்குறுதி' என்னும் சிறந்ததோர் தமிழ் நாடகமும் சபையோரின் பாராட்டைப்பெற்றதோடு விழா இனிதுமுடிந்தது.

— செல்வன்.

---

● அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின் அழியாத்திருமேனி இருந்துவருகின்ற பழையகோவையிலே சமய, கலாசார, சித்திர, சிற்ப, சரித்திரபூர்வமான விலை உயர்ந்த பொருட்களெல்லாம் நிபுணர்கள் பதின்மரைக்கொண்ட ஓர்விசேஷ கம்மிற்றிமூலம் அரசாங்கத்தால்மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கப்பட விருக்கின்றன.

● திருவனந்தபுரத்திலே சமீபத்தில் பாடசாலைஅபிவிருத்தி மகாநாடுஒன்றைச் சென்னைக்கல்விமந்திரி திரு. சி. சுப்பிரமணியம் ஆரம்பித்துவைத்துப் பேசியபோது: சினிமாவுக்குப் போக வேண்டாமென்று மாணவர்களுக்கு நன்மதிகூறி, இளைஞர்களின் உள்ளங்களில் சினிமா மிருகஉணர்ச்சிகளைத் தட்டியெழுப்பி அவர்களின் ஒழுக்கத்தைக் கெடுத்துவருகிறது; இந்தத் தீமையை எதிர்த்துப் போராடுவதன் மூலந்தான் இளைஞர்கள் தங்கள் படிப்பில் முழுக்கவனத்தையும் செலுத்த முடியுமெனக் கூறலாயினர்.

# சிறைவாசஞ் செய்யும் கருதினலின் மேற்றிராணித்துவ வெள்ளியூபிலி

சாகிறெப்நகர் அதிமேற்றிராணியாரும், யூகோசிலேவியாவின் திருச்சபை மேலதிகாரியுமான கருதினல் ஸ்ரீபினக் ஆண்டவர் தாம் சிறைவாசஞ் செய்கின்ற கிருஸிக்எனும் கிராமத்திலே சமீபத்தில் தமது மேற்றிராணித்துவ வெள்ளியூபிலியைக் கண்டு களித்தபோது பரிசுத்த பாப்பரசர் அவருக்கு ஓர்சோபனவாழ்த்துத் திருமுகமும், தமது ஆசியும் அனுப்பிவைத்தார். கருதினல் ஆண்டவர் 1951-ம் ஆண்டுமுதல் கிருஸிக்எனற தமது சொந்தக் கிராமத்தில் சிறைவாசஞ் செய்து வருகின்றார். இவர் 1946-ம் ஆண்டு புரட்டாசிமாதம் கைது செய்யப்பெற்றுச் சில வாரங்களின்பின் ரிற்ரோவின் அரசாங்கத்தாலே 16 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றார். இவர் சிறைச்சாலையில் இருந்தபோதே 12-ம் பத்திநாத பாப்பானவரால் கருதினல்பதவிக்கு உயர்த்தப்பெற்றார். ஆனல், புதிய கருதினல் தமது பதவிக்குரிய சிவப்புச் சீராவைப் பெற்றுக்கொள்ளுமாறு ரோமாபுரியில் நடந்தேறிய கருதினல்மார் திருச்சங்கத்துக்குச் சமுகமளிக்க இயலாதிருந்தார். மாஷல் ரிற்ரோவுக்கு மேற்குநாடுகளின் உதவி அவசியம் வேண்டியிருந்தபோது அந்நாடுகள் நெருக்கியதன் பேரிலே அவர் கருதினல் ஆண்டவரை லெப்போகிளாவியா சிறைச்சாலையிலிருந்துவிடுவித்து, வெளியேறப்படாதென்ற கட்டளையுடன் கிருஸிக் என்ற கிராமத்துக்கு அனுப்பிவைக்கலாயினர். அதுமுதல் தரிசகர்கள் எவரும் தம்மைச் சந்திக்கப்படாதென்ற கட்டுப்பாட்டுடனும், பேச்சுச் சுதந்திரமின்றியும் அவர் இருந்து வருகின்றார். ஆயினும், அவர் இன்றுவரை வேதவிரோதிகளை எதிர்த்துநிற்பதில் வீரத்துவமாயும், சர்வாதிகாரிகளின் நெருக்குதலுக்கு ஒருபோதுமே விட்டுக்கொடாதவராய் யூகோசிலேவியாவில் திருச்சபையின் கலங்கரைத் தீபமாயும் திகழ்ந்துவருகின்றார்.

# சென் வின்சென்ற் டீ போலின் முந்நூறும் ஆண்டுவிழா

சென்வின்சென்ற் டீபோலின் வாழ்க்கை வரலாற்றை வர்ணிக்கும் பலவினத் தபால் முத்திரைகளையும், விசேஷ வங்கிநோட்டுகளையும் பாவனைக்கு விடுமாறு பிரான்ஸிய அரசாங்கம் கேட்கப்பட்டிருக்கின்றது. "மிஸ்யே வின்சென்ற் பரமபதமடைந்த 300-ம் ஆண்டு நிறைவுவிழா அடுத்துநிகழும் 1960-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 27-ந் திகதி வருகின்றது. இதனை அகிலமுழுவதும் பரக்க ஞாபகப்படுத்துவதன் ஓர்பகுதியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டு"மெனப் பிரான்ஸிய சாஸ்திர அபிவிர்த்திக்கழக அங்கத்தவரும், முதன்மைவாய்ந்த கத்தோலிக்க பிரமுகருமான எம். ஹென்றி டேனியல் - றொப்ஸ் அவர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றார். இந்த நடவடிக்கையாலே சென் வின்சென்ற் டீ போலால் தொடக்கப்பெற்று, அவரால் அடியிடப்பட்ட வின்சென்றிய குருமார் சபை, பிறர்சிநேக குமாரத்திகள் கன்னிகாசபை ஆகிய இருசபைகளாலும் கொண்டு நடத்தப்படும் கஷ்டநிவாரண - தருமதொண்டுகள் அதிகம்பிரஸ்தாபமாக அறியப்படுமென அவர் கூறியிருக்கின்றார்.

# மணித்தியாலந்தோறும் செபமாலை

அமெரிக்காவிலே "பறக்கும் பாட்டனர்" என அறியப்படுகின்ற திரு. மாக்ஸ் கொன்ரூட் என்பவர் சமீபத்திலேசிக்காகோ நகரிலிருந்து இடையிலே எங்கேனும் தரியாது அத்திலாந்திக் மகா சமுத்திரத்திற்கு மேலாகப் பறந்து ரோமைநகர் போய்ச் சேரலாயினர். ஆகாயத்திலே அவர் விமானத்தில் பறந்த 34 மணித்தியாலங்களிலும் ஒவ்வோர் மணித்தியாலத்திலும் கடைசியான 15 நிமிஷங்களைச் செபமாலைசொல்வதிலே செலவிடலாயினர். 56 வயதுடையவரான இந்த ஆகாயவிமானி இத்துடன் அத்திலாந்திக சமுத்திரத்திற்குமேலாய் ஐம்பதுமுறை பறந்திருக்கிறார். சிககா கோவிலிருந்து தன்னந்தனிமையாக 5,220 மைல்தூரங்கடந்து ரோமைநகர்போய்ச்சேர்நத இந்த வீரருககு அருளப்ப பாப்பரசர் வத்திக்கான் மாளிகையிலே ஓர்பிரத்தியேக பேட்டி அருளலாயினர். அப்போது ஓர்சிறிய தனி எஞ்ஜின்விமானத்திலே 34 மணித்தியாலம் 3 நிமிஷம் தான்நடத்திய பிரயாணத்தைப்பற்றிப் பாப்பரசருக்கு அவர் எடுத்துக்கூறினர். தனது பிரயாணத்தின்போது தேவதாயாரின் சுரூபம்ஒன்றைக் கொண்டுசென்றதாகவும், அத்திலாந்திக் மகா சமுத்திரத்திற்கு மேலாகப் பறந்துவரும்போது அநேகமுறை அவரை மன்றாடியதாகவும் அவருக்குத் தெரிவித்துக்கொண்டார்.

# கைது செய்யப்பட்ட 10-ம் ஆண்டு

சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்திலே இரும்புத்திரைகருப் பின்னுலுள்ள செக்கோசிலவககியாவின் தலைப்பட்டணமாகிய பிறேக்நகர் அதிமேற்றிராணியாரான பீறன் ஆண்டவர் கைதான பத்தாம் ஆண்டு நிறைவு சமீபத்திலே ஞாபகப்படுத்தப்படலாயிற்று. பீறன் ஆண்டவர் பகிரங்கமாகக் காணப்பட்டது 1949-ம் ஆண்டு ஆனிமாதம் 9-ந் திகதியாகும். அப்போது அவர் பிறேக்நகர் ஆசனக்கோவிலிலே பிரசங்கபீடத்தில் நின்று கம்யூனிஸ்தர்கள் செக்கோசிலவக்கியாவை ஓர் பிரிவினைச்சபை நாடாக்கிவிடுவதற்குச் செய்துவந்த பிரயத்தனங்களைக கண்டனஞ்செய்தார். அதன்மேல் உடனேதானே அவர் இல்லக்காவலில் வைக்கப்பெற்றார். 1951-ம் ஆண்டு பிறேக்நகரிலிருந்து வெளியே கொண்டுபோகப்பெற்று அதுமுதல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறைவைக்கப்பட்டுவந்தார். ஒவ்வோர் இரவும் ஓர்குறித்தவேளையிலே செக்நாட்டுக் கத்தோலிக்கர் இரகசியமாகத் தாங்கள் செய்துகொண்ட சத்தியவாக்கை மேற்கொண்டு சிறைவைக்கப்பட்டுள்ள தங்கள் அதிமேற்றிராணியாருக்காகச் செபஞ்செய்து வருகின்றார்கள். அவர் சீவந்தராய் இருக்கின்றாரா, அன்றேல் தம்மைக் கைதுசெய்த கம்யூனிஸ்தர்களின்கையில் இறந்துதான் போயினரா என்பதை அவர்கள் இன்றுமே அறியமாட்டார்கள்.

---

## பாப்பரசரின் உந்நத மகிமைவரிசை

பிரான்ஸிய ஜனதிபதியாகிய ஜெனறல் சாள்ஸ் தெ கோல் அவர்கள் சமீபத்திலே தமதுபாரியார் சமேதராய் வத்திக்கான் மாளிகைசென்று பாப்பரசரின் பேட்டிபெற்றபோது, அவர் பரிசுத்த பிதாவுக்கு இரு புராதன 'பைபிள்'களை அன்பளிப்புச் செய்யலாயினர். அதற்குப் பதில்பாப்பரசர் இறப்பாயேலின் நானுவர்ணச் சித்திர வேலைப்பாடு ஒன்றையும், தமது கைச்சாத்திட்ட தம்முடைய பிரதிமைப் படம் ஒன்றையும் அவருக்குச் சந்மானித்தார். அவரின் பாரியாருக்கு ஓர் தங்கச் செபமாலையை வழங்கினர். தெகோல் தம்பதிகள் வத்திக்கானை விட்டு வெளிப்படுமுன் ஆஞ்ஜெலோ அக்குவா அதிமேற்றிராணியார் கிறீஸ்துவின் பிரதம மகிமை வரிசை என அறியப்படுவதான, பாப்பரசால் வழங்கப்படும் மகா உந்நத மகிமைவரிசையை ஜனதிபதிக்குச் சந்மானிக்கலாயினர். 1494-ம் ஆண்டு எட்டாவது சாள்ஸ் மன்னர் பாப்பானவர் ஒருவரைச் சந்தித்தபின் பிரான்ஸிய அரசாங்க தலைவர் ஒருவர் பாப்பரசரைச் சந்தித்திருப்பது இது இரண்டாம்முறையாகும். இதற்குமுன் பிரான்ஸிய ஜனதிபதி கோத்தி அவர்கள் இற்றைக்கு இருவருடங்களின்முன் 12-ம் பத்திநாத பாப்பரசரின் பேட்டி பெற்றுள்ளனர்.

## நூதனசாலையாக மாறிய ஆசனக்கோவில்

சோவியற்ருஷியாவால் அடிப்படுத்தப்பட்ட நாடுகளில் லாத்வியாவும் ஒன்று. 1940-ம் ஆண்டு அது இதனை அடிப்படுத்திப் பின்னர் 1944-ம் ஆண்டு ருஷியவுடன் சேர்த்துக்கொண்டது இதன் தலைப்பட்டணமாகிய றீகாநகரில் இருந்துவந்த அர்ச். யாகப்பரின் ஆசனக்கோவில் கம்யூனிஸ்தர்களால் இப்போது ஓர்நூதன பொருட்காட்சிச்சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆசனக்கோவில் அந்நகரைப்போன்று அத்தனை புராதனமானது. றீகாநகர் அடியிடப்பெற்றுப் பத்துவருடங்களின்பின் — அதாவது 1211-ம் ஆண்டு இது கட்டியெழுப்பப்பட்டது. யுத்தத்துக்குமுன் லாத்வியநாட்டின்மக்களில் காற்பங்குபேர் கத்தோலிக்கராயிருந்தார்கள்.

## எதிர்கால திருச்சபை

"மேற்கு உலகின் எந்தப்பகுதியில் இருந்தாவது வருகின்ற நாம் இப்போதைய திருச்சபையிலிருந்து வருகின்றோம்.... ஆனல், வருங்கால திருச்சபையாய் இருக்கப்போவன ஆசியாவும், ஆபிரிக்காவும், ஓஷானியாவுமே" என்று விசுவாசப பரப்புதற் சபையின் அமெரிக்க தேசிய தலைவரான புல்ரன் ஷீன் மேற்றிராணியார் சமீபத்திலே ரோமாபுரியில் கூடியிருந்த சுமார் 800 எதிர்கால மிஷனரிமார்களிடம் கூறலாயினர். மேலும் தற்போது நடந்துகொண்டிருக்கும் வேதகலாபனை அலைகள் ஓடியமர்ந்ததும் மனந்திரும்பிக் கிறீஸ்துவேதத்தில் சேருகிறவர்களின்தொகை மிகப் பெருந்தொகையாய் இருக்குமென்று அவர் தெரிவித்து, அதற்கு ஆதாரமாக, ஒவ்வோர் பயங்கரவேதகலாபனைகாலத்தையும் தொடர்ந்து ஒவ்வோர் மிஷனரிய சகாப்தம் உண்டாயிருந்ததை எடுத்துக்காட்டினர்.

## பாத்திமா அன்னையின் பக்தர் பாத்திமாவில்

அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்தசபைப் பாதிரியாராயிருந்து மனந்திரும்பியவரும், தமதுஎழுத்துகள்மூலமும், பேச்சுகள்மூலமும் பாத்திமா நாயகியின் பக்தியைப் பரப்புவதற்குப் பலவருடங்களாகத் தம்மை அர்ப்பணஞ் செய்தவருமான திரு லோறென்ஸ் ஹார்லே அவர்கள் சமீபத்திலே தமது 73-ம் வயதிலே பாத்திமா திருப்பதியில் காலஞ்செல்லலாயினர். ஆங்கிலம்பேசும் யாத்திரிகர்களை வரவேற்பதற்கு உதவி செய்யுமாறு சிலகாலத்தின்முன் இவர் அத்திருப்பதி சென்றிருந்தார். இவர் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் எம். ஏ. பட்டம் பெற்றவர். 1909-ம் ஆண்டு ஓர் அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்த சபைக் குருவாக அபிஷேகம்செய்யப்பட்டார். முதலாவது உலக யுத்தத்தில் சேவை செய்த இவர் அந்தயுத்தம்முடிந்ததும் கத்தோலிக்க திருச்சபையில்சேர்ந்து சில வருடகாலம் ஆசிரியராகக்கடமை பார்த்தபின் பாத்திமா அன்னையின் சேவைக்காக ஆசிரியபதவியைத் துறக்கலாயினர்.

## ஆடிமாதம்

**பொதுக்கருத்து:** நீதி, பிறர்சிநேக உணர்வினால் உந்தப்பட்டு வீதிகளில் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க அனைவரும் உதவும்படியாக வேண்டிக்கொள்வது.

**விசேஷகருத்து:** சியதேசத்தில் திருச்சபையின் அப்போஸ்தல தொண்டு செழிப்படைவதற்காக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
ஆடிமாதம் 23-ந் திகதி

## இலங்கையிலிருந்து ஒருகூச்சல்

கேரளநாட்டிலே கம்யூனிஸ்தர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தபின் கடந்த இருபத்தேழுமாதங்களிலும் நடத்திவந்திருக்கும் திருவிளையாடல்களை இப்போது இந்தியாவும், ஏனையபலநாடுகளும் நன்கறியும். சுணங்கனுக்கு எங்கேபட்டாலும் காலையே தூக்குவதுபோன்று கம்யூனிஸ்தர்களும் எங்கே என்னநேர்ந்தாலும் கத்தோலிக்க திருச்சபையிலும், அதன் அதிகாரிகளிலும் பழிசுமத்துவதும் குற்றம்பாரிப்பதும் பரவணிக்குணமாகும். கேரளநாட்டிலே கம்யூனிஸ்த அரசாங்கமும், அதனைச்சேர்ந்த குண்டர்கோஷ்டிகளும், அதன் கைச் சூத்திரப்பொம்மைகளான பொலிஸ்படைகளும் செய்துவரும் அநீதிகளையும், அட்டூழியங்களையும், விசேஷமாகக் கத்தோலிக்கருக்குமாறாய் முன்னதாகத் திட்டமிட்டுச் செய்துவரும் அக்கிரமங்களையும் கவனிக்கும்போது, இலங்கையிலே கம்யூனிஸ்தர்கள் ஆட்சிக்குவந்தால் என்னென்ன நடக்கும்என்பது நன்குபுலனாகின்றது.

ஜனநாயகசுதந்திரமா? அன்றேல் கம்யூனிஸ்த அடிமைத்தனமா? என்ற பிரச்சினையிலே கேரளமக்கள் கட்சிபேதம் பாராது பந்துக்கட்டாகத் திரண்டு கம்யூனிஸ்த ஆட்சியை எதிர்த்து அதனைக் கவிழ்த்துவிடுவான் இறந்தபோராடிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே — அங்கே கம்யூனிஸ்த அரசாங்கம் கவிழ்ந்துபோகும் அந்தரநிலையில் கலங்கிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே இலங்கைக் கம்யூனிஸ்த கட்சியின் பொதுக்காரியதரிசியான திரு. பீற்றர் கெனமனே கேரளஇராச்சிய கத்தோலிக்க குருமாரில் குற்றம்பிடித்து, கத்தோலிக்கர் கேரளகம்யூனிஸ்த ஆட்சியைக் கவிழ்க்கக் குறுக்குவழியில் முயல்கின்றனரென்று இங்கிருந்து கூச்சல் போடுகின்றார். தற்போதைய நிலைமைகளைக் கவனிக்கும்போது கேரளகம்யூனிஸ்தஆட்சி வீழ்ச்சியுற அதிககாலம் செல்லமாட்டாதென்பது நன்கு துலாம்பரமாகின்றது. அங்ஙனம் வீழ்ச்சியுறுமிடத்து, கேரளமக்கள் அனைவருக்குமே வெற்றிமாலை சூட்டப்படவேண்டியது. ஆனால், திரு. பீற்றர் கெனமன் அதனைக் கேரள கத்தோலிக்கருக்கு மட்டுமே சூட்டிவிடப்பார்ப்பது ஒருபோதும் சரியாகமாட்டாது.

நிற்க, சமீபத்திலே உத்திரப்பிரதேசமுன்னைநாள்கவர்னரும், பிரபல பம்பாய் வழக்கறிஞருமான திரு. கே. எம். முன்ஷி அவர்கள் கேரளத்திலே நான்குநாள் சுற்றுப்பிரயாணஞ்செய்து தாம்நேரில் கண்டவைகளைப்பற்றி வெளியிட்டுள்ள தகவல்களைத் திரு பீற்றர் கெனமனுக்கும், அவர்தோழர்களுக்கும் ஈண்டு அறியத்தருகின்றோம். "கேரளப்போராட்டம் பொதுமக்கள் தாமாகவே கிளர்ந்தெழுந்து நடத்தும்ஒன்றாகும். ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் சேர்ந்து [கம்யூனிஸ்தர்களைத் தவிர்த்து] தங்கள்சொந்தநலனுக்காகவே அரசுசெலுத்திவரும் கம்யூனிஸ்தஅரசாங்கத்துக்கு விரோதமாகப் போராடுகின்றார்கள். இது கத்தோலிக்கர் போராட்டமென்று சொல்லப்படுவது தவறு. கல்விச்சட்டத்தையும், கம்யூனிஸ்தஅரசாங்கத்தையும் நீக்குவது, போராட்டத்தின் முதல்நோக்கமல்ல. பிரஜைகள் தங்களின் சுயஉரிமைகளைப் பாதுகாக்கச் செய்யும் முயற்சியாகும் அது. கேரளத்தில் மக்களின்உரிமைகள் முற்றாகப்பாதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கநிதிகள் கம்யூனிஸ்தகட்சியின் நலனுக்காகப் பாவிக்கப்படுகின்றன. அரசாங்கம்செய்துவரும் ஒவ்வொருகாரியமும் கம்யூனிஸ்தகட்சியின் நலனுக்காகவே செய்யப்படுகிறது. சிறியவிஷயங்கள்முதல் பெரியவிஷயங்கள்வரை கட்சித்தலைவர்கள் அல்லது தலைமைப்பீடத்தின் உத்தரவுபெற்றே செய்யப்படுகின்றது. இதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் சொல்லுந்தரமல்ல. எனதுகூற்றுகளுக்கு ஆதாரம் வைத்திருக்கிறேன். பட்சபாதமற்ற விசாரணைக்கம்மிஷனிடம் அவற்றைச்சமர்ப்பிக்க நான் தயார்"என்பதே. அங்ஙனமாக, திரு. பீற்றர் கெனமன் எல்லாம் அறிந்தார்போன்று தமதுசகாக்கள் ஆங்காங்கு இந்தியாவிலே கூச்சலிடுவதைக்கேட்டுத் தானும் கூச்சலிட்டது ஆச்சரியமல்ல. ஒன்பதுநரியும் ஊளையிட்டால் ஒருநரி பார்த்துக்கொண்டு வாளாவிருப்பதா?

---

## கேரள சுதந்திர கிளர்ச்சி

"உலகில் கம்யூனிஸ்தர்களை ஆட்சிப்பதவிக்குத் தெரிவுசெய்த முதலாவதுஇராச்சியம் கேரளமாயிருந்தால்,அதுவே மக்களின் ஐக்கியபோராட்டத்தால் உலகில் கம்யூனிஸத்தைக்கவிழ்த்துவிழுத்திய முதலாவதுஇராச்சியமாயிருந்து சரித்திரப்பிரசித்தி அடையும்"என்று திரு.அஷோக் மெத்தாஎன்ற பிரமுகர் அன்று ஓர்சபையிலே கூறினார். உலகில் பொதுமக்கள் வாக்களித்துக் கம்யூனிஸ்தர்களை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியது கேரளா ஒன்றுதான். ஆனால், இன்று கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவரும் ஏனையநாடுகளிலே அந்தஆட்சியெல்லாம் பலாத்காரத்தையும், சனசங்காரத்தையும், பயங்கர ஆக்கிரமிப்பையும் மேற்கொண்டு, பீரங்கிமுனையிலே ஆயுதபலத்தைக்கொண்டு அமைக்கப்பட்டன என்பது அகிலஉலகமும் நன்கறிந்ததே.

அங்ஙனமாக, கேரளநாட்டில் கம்யூனிஸ்தஆட்சி என்று ஆரம்பமானதோ அன்றே ஏனைய கம்யூனிஸ்த நாடுகளிற்போன்று தனதுபிறவிக்குணத்தை அதுகாட்டத்தொடங்கியது. அதனால் இன்று அந்நாடு அமைதிகலைந்து, குழப்பமடைந்து, அல்லோலகல்லோல காட்சியளிக்கின்றது. அங்கே தன்னைஎதிர்த்துக் கவிழ்த்துவிடுவான் சாத்வீகப்போர் நடத்திவருகின்ற எதிர்க்கட்சிகளையும், மற்றும் தனிப்பட்ட சமூகங்களையும், ஏனையோரையும் அடக்கி ஒருகைபார்க்க ஹங்கேரிய கம்யூனிஸ்த அரசாங்கத்துக்குப்போல் தனக்கும் ருஷியா தாங்கிகள், பீரங்கிகளுடன் அண்மையில் இல்லையே என்று கேரளகம்யூனிஸ்த அரசாங்கம் கலங்குமானால் எவருமே அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. பிரதமர்நேரு கேரளாவிற்கு விஜயஞ்செய்தார். நேர்முகமாக யாவற்றையும் கண்டறிந்தார். ஈற்றில் பொதுத்தேர்தல் ஒன்று நடாத்துவதுதான் சாலச்சிறந்ததென்று ஆலோசனைகூறினார். ஆனால், கேரளஅரசாங்கம் அவர்கூறிய ஆலோசனையை நிராகரித்துவிட்டது. ஏன்? தற்சமையம் பொதுத்தேர்தல்ஒன்று நடைபெற்றால் தாங்கள்நிச்சயம் முறியடிக்கப்பட்டுவிடுவார்கள் என்பதைக் கம்யூனிஸ்தர்கள் நன்குஉணர்ந்துள்ளனர். அதனால்தான் தேர்தலுக்குச்சம்மதிக்க மறுக்கின்றனர். அம்மட்டா! அந்நாட்டிலே வருகிற ஆவணிமாதம் நடைபெறவிருந்த நகரசபைகளின் தேர்தல்களையும் தள்ளிவைத்திருக்கின்றனர். அரசாங்கத்துக்குஎதிராக அங்கே எதிர்க்கட்சிகள் பெருங்கிளர்ச்சி நடத்திவருவதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளும், ஏனையகுழுக்களும் அரசாங்க காரியாலயங்கள், பஸ்கள், கல்லூரிகள், கலாசாலைகள் ஆதியனமுன்பாகநடத்திவந்த மறியல்கிளர்ச்சிகள் சென்றதிங்களிலிருந்து முன்னிலும் அதிகம்மும்முரமாய் நடைபெறத்தொடங்கிப் பொலிஸ்கோஷ்டிகளையே களைக்கப்பிடித்துவிட்டன. அவர்களும் கிளர்ச்சிக்காரர்களைக் கைதுசெய்வதில் களைகொண்டுவிட்டார்கள். நாட்டிலுள்ள சிறைச்சாலைகளெல்லாம் கைதுசெய்யப்பட்டவர்களால் தேங்கியிருக்கின்றன. கடைசியாக அங்குள்ள புராதன கோட்டைஒன்று சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. கத்திக்குத்துகளும், துப்பாக்கிச்சூடுகளும், கைகலப்புகளும், கம்யூனிஸ்த அட்டூழியங்களும் நாடெங்கும் தாண்டவமாடுகின்றன. அங்கே கம்யூனிஸ்தர்களின் பலமும், செல்வாக்கும் அதிகம் குறைந்துவிட்டன என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அவர்கள்எவ்வளவோ நட்டணைகள்செய்து கத்தோலிக்கரிலும், கத்தோலிக்கஅதிகாரிகளிலும் தங்கள்கறுவியத்தை தீர்த்துவருகின்றார்கள். கூழுக்கு மாங்காய் தோற்குமா? என்றவாறு கேரளபெண்மணிகளும் சத்தியாக்கிரக போராட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றார்கள். அங்கு சென்றவாரம் ஒரேநாளில்மட்டும் ஆயிரம்பெண்மணிகளுக்குமேல் கைதானார்கள். கேரளசத்தியாக்கிரகம் அதன் கம்யூனிஸ்தஅரசாங்கத்துக்கு விரைவிலே ஓர்முற்றுப்புள்ளி வைக்குமென்றே நம்பலாம்.

## சுதேச வர்த்தமானம்

——:——

### கொழும்பு நகரசபை

கொழும்பு நகரசபைத்தேர்தல் வருகிற மார்கழிமாத முதல்வாரத்தில் நடைபெறுமெனத் தெரியவருகிறது. இத்தேர்தலிலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எல்லாவட்டாரங்களிலும் போட்டியிடும்போல் இருக்கிறது. யு. என். பி. கட்சியும், லங்கா சமசமாஜ கட்சியும் எல்லாவட்டாரங்களிலும் போட்டியிட ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. கம்யூனிஸ்தகட்சி தன்னால் கூடியளவு ஸ்தானங்களில் போட்டியிட முயற்சிக்கின்றது.

### மன்னார்ப்பட்டினசபைத் தலைவர்

பாராளுமன்றத்திலே மன்னார்ப்பிரதிநிதியும், கடந்தபன்னிரு ஆண்டுகளாக மன்னார்ப்பட்டினசபையிலே சின்னக்கடைவட்டார அங்கத்தவராய் இருந்துவருகிறவருமான திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள் மீண்டும் மன்னார்ப்பட்டினசபைத் தலைவராகச் சென்ற15-ந்திகதியன்று தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றார். திரு. எஸ். ஆர். எம். வி. வேலுசாமிஅவர்கள் உபதலைவராகத் தெரிவுசெய்யப்படலாயினர்.

### போட்டியிடப்போதும் தம்பதிகள்

அடுத்தபொதுத்தேர்தலிலே பிரதமர் பண்டாரநாயகாவும், அவர்மனைவியும் போட்டியிடலாமென்று அரசியல்வட்டாரங்கள் கூறுகின்றன. பிரதமர்முன்போல அத்தனகலைத்தொகுதியில் போட்டியிட, அவர்மனைவி புதிதாக வகுக்கப்பட்டதொம்பேதொகுதியில் போட்டியிடக்கூடுமாம். இவர்களுடன் அடுத்ததேர்தலில் ஐந்துதம்பதிகள் போட்டியிடுவார்களாம். அவர்கள்வருமாறு: (1) பிலிப் குணவர்த்தனா தம்பதிகள். (2) லெஸ்லி குணவர்த்தனாதம்பதிகள். (3) திரு. ஆர். ஈ. ஜயதிலகாதம்பதிகள். (4) கே. எம். பி. இராஜரத்தினாதம்பதிகள். (5) பண்டாரநாயகாதம்பதிகள்.

### கொலைகளின் பெருக்கம்

இலங்கையிலே ஞாயிற்றுக்கிழமைவரை 339கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. நிகழும்ஆடி மாதத்தின் முதற் 19தினங்களிலும் 24கொலைகள் நடந்திருக்கின்றன.

### தவறணைகளும் நஷ்டபரிகாரமும்

கொழும்பிலே வேலைநிறுத்தம்காரணமாகக் கள்,சாராயத்தவறணைகளும், குடிவகைச்சாய்ப்புகளும் மூடப்பட்டமையால் அரசாங்கம் அவற்றிற்கு நஷ்டஈடாகப் பெருந்தொகைப்பணம் கொடுக்கவேண்டிவந்திருக்கிறது. சென்ற17-ந்திகதிவரை அதுகொடுக்கவேண்டிய நஷ்டஈடு 3,50,000ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. சில்லறைவியாபாரம், ஹொட்டல் பார்களின்கணக்கு இதில்சேரவில்லை. தவறணைகளைப் பொறுத்தமட்டில் நாளொன்றுக்குச் சராசரி 15,000 ரூபாவும், ஏனையவைகளைப் பொறுத்தமட்டில் 1,000ரூபாவும் கொடுக்கவேண்டிவரும்.

# அங்கும் இங்கும்

### பருத்தி உற்பத்தியிலும் கவனம் செலுத்துக!

"நெசவுதொழிலில் ஈடுபடுவதால் ஆண், பெண் இருபாலாரிலும் இளைஞர்கள் நல்லஎதிர்காலத்தை நிச்சயமாக அடைவார்கள். நெசவுதொழிலுடன் நெசவுதொழிலுக்குத் தேவைப்படும் மூலப்பொருளான பருத்தி உற்பத்தியிலும் அவர்கள் கவனம் செலுத்துவரேல் நாட்டின் சுயதேவைப் பூர்த்திக்கு உதவியளிப்பதுடன் தாங்களும் பொருளாதார மந்தத்திலிருந்தும், வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்தும் விடுதலைபெற்றவர்கள் ஆவார்கள்."

திரு. எம். ஸ்ரீகந்தா,
யாழ்ப்பாண அரசாங்க அதிபர்

"பொதுத்தேர்தல் நடைபெறவேண்டுமென்று நாம் சொல்வதற்குக் காரணம் நாம் ஆட்சிக்குவரவல்ல. ஆனால், இந்நாட்டைக் காப்பாற்றவேண்டும் என்பதற்கே. இன்றைய பிரதமர் பதவிக்கு ஆசைப்படாவிட்டால் அவர் உடனே இராசிநாமாச் செய்யவேண்டும். திரு. டட்லி சேனநாயகா ஒரு கொள்கை அடிப்படையில் இராசிநாமாச் செய்தார். மொழிப்பிரச்சினையின்பேரில் சேர் ஜோண் கொத்தலாவல பாராளுமன்றத்தைக் கலைத்தார். ஒன்றரை ஆண்டுகள் இருந்தபோதிலும் இன்று ஆட்சிசெய்யும் கட்சியிலிருந்து விலகியவர்கள் அந்தக்கட்சிகேடுகெட்ட கட்சியென்று கூறுகிறார்கள். விரைவில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுமென நாம்எதிர்பார்க்கின்றோம்."

திரு. எச். டபிள்யு. அமரசூரியா,
முன்னைநாள் வர்த்தக மந்திரி.

### மந்திரிகளுக்குக் கட்டுப்பாடு

"அடுத்த இரு ஆண்டுகள் மிகவும் முக்கியமானவைகள். ஆதலால், மந்திரிகள் நாட்டுக்குஆற்றவேண்டிய அலுவல்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படவிருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்டுள்ள பலகோரிக்கைகள் பூர்த்தி செய்யப்பட விருக்கின்றன. ஆதலால், மந்திரிகள் நாட்டிலேயே இருந்து கடுமையாக வேலைகளைச் செய்யவேண்டும், அதிகமானவேலைகளைச் செய்யவேண்டும். மந்திரிகள் வெளிநாடுகளுக்குச்செல்வதால் அவர்களின் பதவிகளில் தற்காலிக நியமனங்கள்பல செய்யவேண்டியிருக்கிறது. தற்காலிக பதவிகளை ஏற்பவர்கள் நிரந்தர மந்திரிகளின்றி எக்காரியத்தையும் திடசித்தத்துடன் செய்துமுடிக்கத் தவறுகிறார்கள் என்பது அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாகும்."

பிரதமர் பண்டாரநாயகா

### பொய்ப்பிரசாரத்திற்குப் பலியாகியது

"கடந்த பொதுத்தேர்தலின்போது யு. என். பி. கட்சி பதவிக்குவந்தால் புத்தர்கள் பாதிக்கப்படுவார்கள்; கிறீஸ்தவர்கள் இலாபமடைவார்களென்று எம். ஈ. பி. கட்சி பொய்ப்பிரசாரம் செய்துவந்ததால் யு. என். பி. கட்சி ஆக எட்டுஸ்தானங்களைப் பெற்றது. யு. என். பி. கட்சி பதவியில் இருந்தபொழுது கிறீஸ்தவ கவர்னர்-ஜெனறலை வைத்திருந்ததாகவும், தாங்கள் பதவிக்கு வந்தால் கிறீஸ்தவ கவர்னர்-ஜெனறலை உடனே பதவியிலிருந்து விலக்குவதாகவும் கூறினார்கள். பின் என்ன நிகழ்ந்தது? பண்டாரநாயகா பதவிக்குவந்தார். கிறீஸ்தவ கவர்னர்-ஜெனறலை விலக்கினாரா? இல்லை. அவரை நன்றாகமதித்துப் போற்றி வருகின்றார். யு. என். பி. கட்சி வீழ்ச்சியுற வேண்டுமென்று 1956-ம் ஆண்டு கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றசிலபுத்தபிக்குகள் இப்பொழுது தங்கள் தவறுகளை உணர்ந்துவிட்டார்கள்."

திரு. ஆர். பிரேமதாசா,
முன்னாள் கொழும்பு உதவிமேயர்

### தமிழினமும், சுயாட்சி உரிமையும்

"இலங்கையில் அமைக்கப்படும் எந்தச் சிங்கள ஆட்சியும் தமிழ்ப்பேசும் மக்களுக்குச் சுயாட்சிகொடுக்கவேண்டிய காலம்ஒன்று உடனடியாகஇல்லாவிட்டாலும் கூடியகெதியில் வந்தே தீருமென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். தமிழ்இனத்துக்குச் சுயாட்சிஉரிமை வழங்காமல் இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் அமரும் எந்த ஆட்சியாளரும் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் இயங்கமுடியாது."

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்,
காங்கேசன்துறை எம். பி.

### கடின உழைப்பில் நம்பிக்கை

"இசிறவேல்மக்களை இலங்கையர்கள் பின்பற்றவேண்டும். 1945-ம் ஆண்டு நாற்பதுக்குமேற்பட்ட நாடுகளிலிருந்து யூதர்கள் இசிறவேல் நாட்டிற்போய்க் குடியேறினார்கள். அப்போது அந்நாட்டின் இயற்கைஅமைப்பு வாழ்க்கைக்குப் பொருத்தமற்றிருந்தது. ஆயினும், சொற்பகாலத்தில் இசிறவேலர்களின் கடினஉழைப்பினால் அங்கு வயல்களும், ஆலைகளும் பெருக்கமடைந்து சுபீட்சத்தை உண்டுபண்ணின. பலநாடுகளிலுமிருந்துசென்ற அவர்கள் பலமொழிகளைப் பேசிய போதிலும் கடினஉழைப்பில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்."

திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா,
யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி.

### கம்யூனிஸ்தர்கள் ஆட்சிக்கு வந்தால்!

"உலகில் இலங்கைதான் மிக அழகான தீவு. இலங்கை இந்தியசமுத்திரத்திலுள்ள ஒரு பவளம். திரு. பண்டாரநாயகா ஆட்சிக்கு வந்தபொழுது இலங்கை ஓர் திருமணவீடாகக் காட்சியளித்தது. ஆனால், இன்று இலங்கை ஓர் சாவீடாகக் காட்சியளிக்கின்றது. இன்று ஊழல்நிறைந்த முறையில் ஆட்சி நடைபெறுகிறது. சட்டமும், ஒழுங்கும் இல்லை. நமக்குத் தேவையான பொருட்களை நாம்வாங்க முடியவில்லை. இந்தநாடு 12,000 துறைமுகத் தொழிலாளராலே ஆளப்படுகிறது. நாட்டின் பொருளாதாரவளம் மோசமாகிவிட்டது. தீபேத்து, சீனு போன்றநாடுகளில் கம்யூனிஸ்தர்களால் கோவில்கள் அழிக்கப்படுகின்றன. இலங்கையிலும் கம்யூனிஸ்தர்கள் ஆட்சிக்கு வந்தால் இதேநிகழ்ச்சிகள் நடைபெறும்."

திரு. எச். டபிள்யு. அமரசூரியா,
முன்னைநாள் வர்த்தக மந்திரி.

---

நீ. சந்தியா தியேஸ் அவர்கள்
**பரம பதமடைந்த**
**முதலாம் வருட ஞாபகம்**
**இறப்பு: 25-7-1958**

"உத்தானமும், உயிரும் நானே; என்னில் விசுவாசமாயிருக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான். உயிரோடிருக்கையில் என்னை விசுவசிக்கிற எவனும் நித்தியத்துக்கும் சாகமாட்டான்" என்று திருவுளம்பற்றிய உலக இரட்சகரே, மரித்துப்போன உமது அடியானாகிய சந்தியா தியேஸின் ஆத்துமத்தைஇரட்சித்தருளும். இவர் ஆன்மா சாந்தியடைய 27-7-59 திங்கட்கிழமை காலை 6-10 மணிக்கு, பேசாலை வெற்றிமாதா ஆலயத்தில் ஓர் துக்கப் பாடற்பூசை நிறைவேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே, சந்நியாசிகளே, கன்னியாஸ்திரிகளே, அன்பர்களே, இவர் ஆன்மா சாந்தியடைய வேண்டிக்கொள்ளுங்கள்.

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், சோதரன்.

---

கனிஷ்ட பாடசாலைத்
## தராதரப் பத்திரப் பரீட்சை
**கார்த்திகை — 1959**

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 25–9–59-க்கு முன்பாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 1–8–59-க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

1959 — 1960 பரீட்சைக்குழு உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு:

தலைவர் — திரு. சி. வைரமுத்து,
வைத்தியேஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
காரியதரிசி — திரு. ஆ. இராசசிங்கம்,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
உப காரியதரிசி — திரு. சி. குணபாலசிங்கம்,
இந்துக்கல்லூரி, கொக்குவில்.

குறிப்பு: தமிழ்ப் பாடத்திட்டத்தில் மாற்றம்

பின்வருவன 1959-ம் ஆண்டுப் பரீட்சைக்கு "இன்பத்தமிழில்" தவிர்க்கப்பட்டுள்ளன.

செய்யுள்: புறநானூறு
ஆலத்தி எடுத்தல்
பாரதம் (கடைசி ஆறு பாட்டுக்கள்)
இராமாயணம் (முதல் ஆறு பாட்டுக்கள்)
மனனப்பகுதி: இதற்கேற்பப் பாரதத்தில் ஒரு பாட்டுத் தவிர்க்கப்படும்.
வசனம்: சி. வை. தாமோதரம்பிள்ளை "அஞ்சாமை"

1960–ம் ஆண்டுக்குரிய பாடத்திட்டங்கள், புத்தகங்கள் ஆதியன பற்றிய கருத்துக்களை 28–7–59-க்கு முன் தெரிவிக்கும்வண்ணம் பாடசாலை அதிபர்களும், மற்றையோரும் வேண்டப்படுகின்றனர்.

330, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

ஆ. இராசசிங்கம்,
கௌரவ காரியதரிசி, வ. ஆ. ச. பரீட்சைக்குழு.

---

## NOTICE

The Representative of The Lanka Musical Works will be at Jaffna for about three weeks from 15th July, 1959 at The Renown Bakery, Small Bazaar, Jaffna to undertake the Repairing and Tuning of all Musical Instruments Piano, Organ, Harmonium, Etc. Repairing of Type-writers is also undertaken.

**M. D. Joseph Nicholas,**
Bopitiya,
Pamunugama.



### பெரியகட்டு
**அர்ச். அந்தோனியார் திருநாள்**

வழமைப்பிரகாரம் ஆவணிமாத முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

30-7-59 வியாழக்கிழமை தொடங்கித் திரிதின ஆராதனை நடைபெறும். 2-8-59 ஞாயிற்றுக்கிழமை திருநாட்பூசையும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும்.

**கவனிப்பு:** 30-7-59 தொடங்கி 4-8-59 வரை பகல் புகையிரதங்கள் கோவில் அருகாமையில் நிறுத்தப்படும். பஸ்வண்டி வசதிகளும் வழமைப்பிரகாரம் இருக்கும்.

**கட்டளைக்குரவர்,**
செட்டிகுளம்.

---



## 6-ம் வருட மரணஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 23—7—1931 | 28—7—1953 |

எமது செல்வப்புதல்வனும், மன்னார், அர்ச். சவேரியார் கல்லூரியின் உதைபந்தாட்டத் தலைவனுயுமிருந்த செல்வன் எம். கே. அழகராஜா அந்தோனிஐயா தனது வாலிபவயதில் (22) எம்மை விட்டுப்பிரிந்து இன்றோடு (28-7-59) ஐந்துவருடங்கள் பூர்த்தியாகின்றன.

"சுமந்து பெற்றெடுத்த மைந்தா
மறந்தாயோ!
பிரிந்து வருந்துகிறோம் எம்துயர்
தீர்க்கவாராயோ!
அம்மா! என்றகுரல் ஐயோ!
அடங்கியதோ!
புவிமீது மைந்தா எம்பூரிப்பும்
போனதுவோ!"

இதைக்கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் இரந்துமன்றாடும்படி வேண்டுகிறோம்.

"சுவாமி! இவருக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்பசுகத்தைக் கட்டளையிட்டருளும். நித்தியகாலத்தின் பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக் கடவது."

இவர்பிரிவால் துயருறும்
தாய்: க. செல்லம்மா.
தந்தை: மு. கந்தையா.
சகோதரர்கள்: ஜோட்ஜ் நவரட்ணம், பாக்கிய பத்மாவதி, சீமான் செல்வத்துரை.

இவருக்காக 28–7–59 செவ்வாய்க்கிழமைகாலை மன்னார், அர்ச். செபஸ்தியார்ஆலயத்தில் ஓர் துக்கப்பூசை சொல்லப்படும். பொதுவாக மன்னார்மக்கள் அந்தப்பூசையில் பங்குபற்றி அவருக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

# கேரள கல்விமந்திரி முண்டசேரி எங்கே?

பொய்புரட்டுக்களால் பாமரமக்களை ஏமாற்றிப் பாசாங்குப்பிரசங்கத்தால் படித்தவரையும்பராக்குக்காட்டிப் பார் முழுவதும் பரவிவரும் பாஷாண பிண்டங்களானகம்யூனிஸ்தர்களின் பைசாச சுயரூபத்தை முடிமுதல் அடிவரை அணுவணுவாகஆராய்ந்து அறிந்திருக்கும் ஒரேயொருகுழு அன்புசெய்து, அறம்வளர்த்துச் சேவைஆற்றிவரும் கத்தோலிக்க கிறீஸ்துவசமயமே. நாஸ்திக நாகபாம்பை அக்குஅக்காக அரிந்தெறியும் ஆற்றல்வாய்ந்த அருமைக்கிரி கத்தோலிக்க திருச்சபையே.

கடந்த ஒருமாதகாலமாக இந்தவீன நாரதர்கள் சூறுவளிக்காற்றுப்போல் பாரதபூமிமுழுதும் பரவிக்கத்தோலிக்கருக்கு விரோதமாகப் பகையைப்பரப்பி, பொய்ப்பிரசாரம் செய்துவந்தார்கள். கேரளாவில நடைபெறும்கிளர்ச்சி கத்தோலிக்க சமயதலைவர்களால் தூண்டப்பெற்றதென்று வாய்கூசாது பொய் சொன்னார்கள். கேரளாவிலே கம்யூனிஸ்த கட்சியினரைத்தவிர மற்றெல்லாக்கட்சியினரும், சமூகத்தினரும் ஒரேஆள்போல் ஒருவாய்ப்படப் "பதவியிலிருந்து வெளியேறு" என்று ஆர்ப்பாட்டம்செய்து வருகிறார்கள். ஆனால், பிரித்தாளும் சூழ்ச்சியில நம்பிக்கைகொண்ட இப்பித்தலாட்டக்காரர்கள் கத்தோலிக்க தலைவர்களையும், கத்தோலிக்க பொதுமக்களையும் மாத்திரம் துண்டித்துத் தூற்றிவந்தார்கள். ஆனால், உண்மைநிலையை விளக்கும் புள்ளிவிபரங்கள் இதோஇருக்கின்றன.

ஏய்க்காதே! சாதி, மதபேதமற்ற சர்வசனத்தொகுதியாகிய "விடுதலைப் போர்க்குழு" விடுத்துள்ள அறிக்கைப்படி, கேரள கம்மியஅரசாங்கத்துக்கு எதிராகநடைபெறும் மாபெரும் கிளர்ச்சி, ஒருமதப்போர் அல்ல, வகுப்புவாதம் அல்ல

**அரசியற் கட்சிகள்:** காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்த், புரட்சிசோஷலிஸ்த், சோஷலிஸ்த் (லோஹியா), முஸ்லீம்லீக், விமோசனசமிதி இத்தனையும் ஒன்றுசேர்ந்திருக்கின்றன.

**தொழிலாளர் கட்சிகள்:** இந்திய தேசியதொழிற்சங்கம், ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ், ஹிந்து மஸ்தூர்சபா, மற்றும கம்யூனிஸ்த்அல்லாத எல்லாத் தொழிற்சங்கங்களும். உதாரணமாகக் கொச்சி துறைமுகத்தொழிலாளர் சங்கம்.

**மாணவர்கள்:** முற்போக்குமாணவர் ஐக்கியம், சுதந்திரமாணவர் மன்றம், மாணவர் காங்கிரஸ், மற்றும்கம்யூனிஸ்த்மாணவர் சம்மேளனம்தவிர எல்லாச்சங்கங்களும் நேரடிநடவடிக்கைக் குழுக்களை ஏற்படுத்தி இறுதிவரை போராடத் தீர்மானித்திருக்கின்றன.

**ஸ்தல ஸ்தாபனங்கள்:** தலைச்சேரி, கோழிக்கோடு, பாலக்காட், திரிச்சூர், எர்ணுகுளம், கோட்டையம், கொல்லம், நெய்யாற்றங்கரை முதலிய நகரசபைகள் "இராசினாமாச்செய்" என்று தீர்மானம்நிறைவேற்றிக் கம்யூனிஸ்த மந்திரிசபைக்கு அனுப்பியிருக்கின்றன.

**பஞ்சாயத்துக்கள்:** கேரளாவில் உள்ளமொத்தம் 894பஞ்சாயத்து யூனியன்களில் 612யூனியன்கள் காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றவைகள். இவற்றோடுசோஷலிஸ்தகட்சியினரும்,காங்கிரஸும்சேர்ந்து பெரும்பான்மைபெற்ற பஞ்சாயத்துக்கள் எத்தனையோ இருக்கின்றன. இவைகள்அனைத்தும் "இராசினாமாச்செய்" எனத் தீர்மானம்நிறைவேற்றிக் கம்மிய மந்திரிசபைக்கு அனுப்பியிருக்கின்றன.

**நியாயவாதிகள் சங்கங்கள்:** அகிலகேரளாவிற்கும் பிரதிநிதியாகிய கேரள நியாயவாதிகள்சங்கம், மற்றும் நகரவாரியாகத் தலைச்சேரி, கோழிக்கோடு, பாலக்காட், ஆலப்புழைமுதலிய சங்கங்களும் "இராசினாமாச்செய்க" என்று தீர்மானம்நிறைவேற்றி மந்திரிசபைக்கு அனுப்பியிருக்கின்றன. திருவனந்தபுரத்தில் 91நியாயவாதிகளும், கொல்லத்தில் 61நியாயவாதிகளும் தனிப்பட்டஅறிக்கையை இதேநோக்கத்துடன் விடுத்திருக்கிறார்கள்.

**பத்திரிகைகள்:** கேரளாவில் 39 தினத்தாள்கள் இருக்கின்றன. இவற்றுள் 26தினத்தாள்கள் "இராசினாமாச்செய்க"!என்று கம்மியஅரசாங்கத்தை அச்சுறுத்தி வருகின்றன. மீதியாகவுள்ள 6பத்திரிகைகளில் 4கம்யூனிஸ்த கட்சியால் நேரடியாக நடத்தப்படுகின்றன. மற்றஇரண்டு கம்யூனிஸ்தர்கள் மறைமுகமாக வளர்த்துவரும் பத்திரிகைகள்.

பொய்யின் புதல்வர்களான பொதுவுடைமைப் பித்தலாட்டக்காரர்களே, என்ன ஆதாரங்களைக்கொண்டு கத்தோலிக்கர்மாத்திரம் கிளர்ச்சிசெய்கின்றனரென்று ஊர்ஊராகத்திரிந்து உளறிவருகிறீர்கள்? உங்கள்பொய்யை ஆயிரம் ஆயிரமபேர் கேட்கலாம் ஆனால், அறிவுள்ளஒருவனும் ஏற்கமாட்டான்.

**நேருவின்விஜயம் உண்மை பரிச்சயம்:** நவீன நாத்திக நாரதர்கள் இந்தியாமுழுவதும் கத்தோலிக்கருக்குமாத்திரம் விரோதமாகப் பொய்ப்பிரசாரங்கள் செய்துகொண்டிருக்க, நாட்டிலுள்ள நாலாகட்சிகளின் தலைவர்களும் கேரளாசென்று நேரடியாக நிலைமையை ஆராய்ந்து அங்குநடைபெறுவது "பொதுமக்களின் ஏகோபித்தகிளர்ச்சி" என்று உலகிற்கு அறிவித்துவந்தார்கள். குறிப்பாகக் காங்கிரஸ்கட்சியின் தலைவி இந்திராகாந்தி அம்மாள், காங்கிரஸ்செயலாளர் சதிக் அலி, முன்னாள் காங்கிரஸ்தலைவர் தேபர், இன்னும்பல பெரியார்கள் அனைவரும் "கேரளாவில் நடைபெறுவது குறுகியவகுப்புவாதக் கிளர்ச்சி அல்ல, பொதுமக்களின் ஏகோபித்தஎழுச்சி" என்று ஒருவாய்ப்படச் சாற்றினார்கள்.

டில்லிஅரசாங்கத்தின் பிரதமர்நேரு கேரளத்திற்கு வெளியேஇருந்தபோது மண்விழுங்கிப்பாம்புபோல் இருதலைப் பிராணியாக இருமருங்கிலும் பட்டும் படாமலும்பேசி இருபாலாருக்கும் நல்லபிள்ளையாக முயற்சித்துவந்தார். இந்தச் சஞ்சலபுத்தியைப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டது கேரள கம்யூனிஸ்தஅரசாங்கம். போராட்டத்திற்குமுன் "நேரு கேரளாவிற்கு வரவேண்டியதில்லை" என்று கூறியவர்கள் போராட்டம் தொடங்கியபின் நேருவின் கம்யூனிஸ்த அனுதாபத்தைத் தங்களுக்குச் சாதகமாகவளர்த்து வளைத்துப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டு, "நேரு நல்லமனிதர்," அவரே கேரளாவில் வந்துபார்க்கட்டும் என்று உச்சிமுகந்து, அவரை அழைத்தனர். அவரும்வந்தார். ஆனி 21, 22, 23-ந்திகதிகளில் கேரளாவில்தங்கி, சகலகட்சித் தலைவர்களையும் கண்டுபேசினார், நேரடியாகக் கிளர்ச்சியைப்பார்த்தார். என்ன முடிவு தெரிவித்தார் நேரு? "கேரளாவில் நடைபெறும்கிளர்ச்சி உணர்ச்சி மிகுந்த உக்கிரப்போராட்டம், இது சாதி, மதபேதமற்ற எல்லாவகுப்பினரும் ஒன்றுசேர்ந்துநடத்தும் பிரமாண்டமான பொதுக்கிளர்ச்சி" என்று கூறினார்.

முண்டசேரி எங்கே? இன்றைய கேரளகிளர்ச்சி, கம்யூனிஸ்த அரசாங்கத்தின் கல்விமந்திரியான பேராசிரியர் யோசெவ் முண்டசேரி அவர்களுக்குக் கிணறுவெட்டப் பூதம்ஆகிவிட்ட கதையாகஇருக்கிறது. கிளர்ச்சிதொடங்குமுன் தக்குப்புக்கெனத் துள்ளிக்குதித்து வீராப்புப்பேசிய முண்டசேரி அங்கமாலித் துப்பாக்கிப்பிரயோகத்தின்பின் பேசாமடந்தையாகிவிட்டார். அதுமாத்திரமல்ல, அவர் எங்கேஇருக்கிறார்?என்றே எவருக்கும்தெரியவில்லை.

நேரு திருவனந்தபுரத்தில் தங்கியிருந்த மூன்றுநாட்களிலும் எல்லாக் கம்யூனிஸ்த மந்திரிகளும நேருவைக் கண்டுபேசினர். முண்டசேரிமாத்திரம் முகத்தைக்காட்டவில்லை இராஜபவனம் முன்பாகக் குழுமியிருந்த லட்சக்கணக்கானமக்கள் "முண்டசேரிஎங்கே? முண்டசேரி எங்கே" என்று கேள்வியைமுழக்கினர். எவரும் எந்தவிதமான பதிலும் கொடுக்கவில்லை.

கத்தோலிக்கன் முண்டசேரி, கத்தோலிக்ககுருமாரால் படிக்கவைக்கப்பட்ட முண்டசேரி, கத்தோலிக்க கல்லூரியில் பேராசிரியனாகப் பணியாற்றிய முண்டசேரி, கம்யூனிஸத்தைக் கல்லூரியிலே பரப்பியதற்காகத் தள்ளப்பட்ட முண்டசேரி, கத்தோலிக்க அதிகாரிகள்மீது உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்துத் தோல்வியடைந்த முண்டசேரி, கத்தோலிக்கதலைவர்களைப்பழிவாங்குவதற்காகக் கம்யூனிஸ்த மந்திரிசபையில் இடம்பெற்றுக் கல்விச் சட்டத்தைக் கொண்டுவந்து இன்றைய கிளர்ச்சிக்குக் காரணமான முண்டசேரி இப்பொழுது கம்யூனிஸ்தர்களுக்கே ஒருமண்டைச்சொறி முண்டசேரி ஆகிவிட்டார். ஐயோபாவம்! முண்டசேரி.

முண்டசேரி கல்விமந்திரியாகப் பணியாற்றிய இரண்டு ஆண்டுகளிலும அவர் சாதித்திருக்கும் பிரபலசாதனைகள்: மகளுக்கு வைத்தியகல்லூரியில் இடம் பெற்றுக் கொடுத்தார். தனது மகனுக்கு ஒருபுத்தகக்கடை வைத்துக் கொடுத்தார். புதிதாகவந்த தனது மருமகள் சம்பளமில்லாது கல்லூரியில் படிக்க ஏற்பாடுசெய்தார். கம்யூனிஸத்தைப் பாடபுத்தகங்களில் புகுத்த முன்வந்த நண்பர்களுக்குப் பணஉதவி செய்தார். தனதுநெருங்கிய, அத்துணை நெருங்காத இனபந்துகளுக்கு அரசாங்கத்தின்பேரால் அச்சுப் போட்டுப் பணம்சம்பாதிக்க வழிவகைகள் காட்டினார். அவர்தழுவிய கம்யூனிஸ்த் அரசாங்கத்துக்கு ஒன்றரைக்கோடி ரூபா செலவில இவ்வளவுகிளர்ச்சிக்கும் மூலகாரணமான கல்விச்சட்டத்தைக் கொண்டுவந்தார். இறுதியில், கம்யூனிஸ்தஅரசாங்கம் அடியோடுகவிழ்ந்து ஒழியச் சந்தர்ப்பம் ஏற்படுத்தினார் இந்தமுண்டசேரி. ஆனால்,இப்பொழுது முண்டசேரி எங்கே?

கத்தோலிக்க சேவை.

—*—

# இளவாலைக் கல்லூரிப் பரிசளிப்பு விழா

சென்ற 15-ந் திகதி புதன்கிழமை இளவாலைக்குப் புதுமைமணங்கமழ்ந்த ஓர் பெருநாள் என்றால் மிகையாகாது. அன்று ஆர்ச். என்றியாசர்திருநாளும், அவரது அடைக்கலத்திலே இருந்துவரும் கல்லூரிப் பரிசளிப்பு விழாவும் இணைந்துமலர்ந்த அருநாளாகும். கதிரவன் உதிக்கும் காலைவேளை கல்லூரிப் பழையமாணவரும், யாழ்நகர் ஆசனக்கோவிற் பதிற் கட்டளைக்குருவருமான வண. ஜே. பி. தேவராசா சுவாமியவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். "இளைஞரே, கிறீஸ்துநாதரைப் பின்பற்றுங்கள்" என்று செவ்யறிவுறுத்திய அவரது பிரசங்கம் இளைஞர் மனதைக் கவர்ந்தது.

மாலைவேளை கல்லூரி தேசோமயமாய் விளங்கியது. வழிதொறும் வாடாமணிமாலைகள் கவிந்துநிற்க, கரைதொறும் கமுகும் வாழையும் நிரையே நிமிர்ந்துநிற்க, சாரணச்சிறுவர்கள் வாழ்த்துக்கூற விழாவின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும், அவர்பாரியாரும் வரவேற்கப்பெற்றனர். பல்வேறிடங்களிலிருந்து பிரமுகர்களும், பெற்றோரும், உற்றாரும், கல்விமான்களும் என்றுமில்லாதவாறு திரளாகக் குழுமியிருக்கப் பரிசளிப்புவிழா ஆரம்பமானது.

கல்லூரிஅதிபர் வண. எல். ஏ. சிங்கராயர், O. M. I, M. A. அவர்கள் தமது அறிக்கையிலே, "கல்வி பயிற்றுவதில் அரசாங்கம்ஏகபோகவுரிமைபாராட்டத் துணிவது நாட்டுக்கே பேராபத்தை விளைவிக்கும்" என்று எச்சரித்துநின்றார். பாடசாலைகள் தேசியமயமாக்கப்படல் எவ்விதத்திலும் பொருத்தமான யோசனையல்ல; அது நாட்டில் நெருக்கடியைக் கொண்டுவருவது திண்ணம்என்று கூறியஅவர் மேலுந் தொடர்ந்து: குழந்தைகளுக்குக் கல்வியூட்டி அவர்களைத் தக்க மனிதராக்கி விடுவதற்கு உதவுவன வீடும், பாடசாலையுமே; பெற்றோர் தங்கள் வழித்தோன்றல்களான பிள்ளைகளுக்குத் தாங்கள் விரும்பிய கல்வியை ஊட்டப் பூரண உரிமை உடையவர்கள்; அரசாங்கம் அந்த உரிமையில் கைவைப்பது பெரும் அநீதியாகும்; குழந்தை பருவம் அடைந்தபின் பெறவேண்டிய விரிந்த அறிவைக் கொடுக்கப் பாடசாலைகள் தேவை; பாடசாலைகள் பெற்றோருக்குத் துணையாயிருந்து அவர்கள் விரும்பிய கல்வியை ஊட்டும் பொறுப்பைப் பெறுகின்றன; எனவே, பெற்றோருக்கு வேண்டியவகையில் அரசாங்கம் அவற்றை நடத்த உதவிபுரிவதல்லாது தானே ஏக அதிகாரம் செலுத்தத் துணிதலாகாது; அன்றியும் ஒழுக்சத்தைக் கடைப்பிடித்துவளர்க்கும் இடங்கள் வீடும், பாடசாலையுமே; இவைகள்இரண்டும் சமயத்தை அடிப்படையாகக்கொண்டு உண்மையான ஒழுக்கத்தைப் பேணிவருகின்றன; இன்று பழிபாதகங்கள் உச்சநிலை அடைந்துள்ளன; இப்பரிதாபநிலையைத் தடுக்கத் தக்க நடவடிக்கைகள் பாடசாலைகளிற்றான் தொடங்கப்படல்வேண்டும்; இன்றேல் பாடசாலைகளாற்றானும் ஒழுக்கக் கேட்டைத் தடுத்துநிறுத்த முடியாமற் போய்விடும்; ஆகவே, நல்லகல்வியூட்டவும், ஒழுக்கமுள்ள மனிதராகக் குழந்தைகளைப் பயிற்றவும் வீடும், பாடசாலையும் இணைந்துநின்று தொண்டாற்றல் அகத்தியம்; பெற்றோரும், ஆசிரியரும் பரஸ்பரம் ஒத்துழைத்தாலன்றி — அதாவது வீடும், பாடசாலையும் நல்லிணக்கம் கொண்டாலன்றி நாட்டில் நல்லசமூதாயத்தை உருவாக்குதல் முடியாதகருமமாகும்; குருபக்தி, பெற்றோரைப்பேணல், கல்வியைக் கருத்தாகக்கற்றல் என்பவற்றைப் புறக்கணித்துப் புற்றீசல்போல் முளைக்கும் தவறான மதிப்புக்களில் மாணவர்கள் ஊறிவருவது வருந்தத்தக்கது; ஆதிதொட்டு இயற்கையாக அமைந்த புனிதவிதிகளினிடமாக நிலைமாறும் தவறானமதிப்புக்களுக்கு மாணவர்கள் இடங்கொ

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

தெரேசா திபுலிக்வாவைத் தெரியுமா உங்களுக்கு? அவள் உகண்டாவைச் சேர்ந்தவள். உவைற் கன்னியாஸ்திரிமாரின் பள்ளியில் கல்வி பயின்றவள் இங்கிலாந்தைச் சேர்ந்த ருவிக்கின்னம் பட்டினத்தில் நடந்த ஐ. நா. க. வி. க. ச. (ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார சங்க) மாநாட்டில் இளம்கத்தோலிக்க மாணவரின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டாள். இங்கிலாந்தில் உயர்தரக் கல்வி பயின்றபின் தன் சென்ம நாட்டில் ஓர் ஆசிரியையாகக் கடமையாற்ற எதிர்பார்க்கிருள்.

முன்கூறிய மாநாட்டிற்குப் 17 நாடுகளிலிருந்து 44 பிரதிநிதிகள் சமுகமளித்தனர். இவர்களில் 12 பேர் கத்தோலிக்கர்

தெரேசா இங்கிலாந்தில் டக்கிலஸ் ஹைட் அவர்களின் விருந்தினராக அவ்விடத்தில் தங்கினுள் இங்கிலாந்தில் வந்திறங்கியதும் குருமார், கன்னியாஸ்திரிமார் கூடிய அவையில் ஓர்பேச்சிற்கு அழைக்கப்பெற்ருள். முன்கூறிப ஐ. நா. சங்கத்திலும் பங்கெடுத்துக் கொண்டாள், வந்தபிரதிநிதிகளில் அதிக இளமையானவளாயிருந்தாலும்.

இரண்டு ஆண்டுகளின்முன் அதாவது — அவள் 17வயதினளாயிருக்கும்பொழுதே உகண்டாவின் தேசிய கத்தோலிக்க சேவாசங்கத்திற்குத் துண்டுப்பிரசுரங்கள் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தாள்

ஆபிரிக்காவில் கத்தோலிக்க பள்ளிகள் உருவாகிக்கொண்டுவரும் புதிய ஆபிரிக்க மகளிர்இனத்திற்கோர் எடுத்துக்காட்டு இவள். தெரேசாவைப் போன்ற கிறீஸ்துவ பெண்மணிகள் எதிர்காலம் புதிய ஆபிரிக்காவில் மாத்திரமல்ல, உலகசரித்திரத்திலும் முக்கியபங்கெடுத்துக் கொள்வர்

தெரேசாவின் பேர்த்தி இன்னும் சீவந்தராயிருக்கிருள். தெரேசா சிறுமியாய் இருக்கும்காலத்தில் அவளுடைய தந்தையைச் சிங்கமொன்று கொன்று தின்றுவிட்டது; தாயை அராபிய அடிமைவியாபாரிகள் களவெடுத்து விற்றுவிட்டனர். இத்தகைய நிலைபரத்திலிருந்த சீமையில் இப்பேர்க்கொத்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதையிட்டு நாம் பெருமைகொள்ள வேண்டாமா?

தெரேசா திபுலிக்வாபோன்ற கத்தோலிக்கசேவா வீராங்கனைகள் பெருகுக.

அண்ணை.

—✻—

## மனிதனின் இலட்சியம்

போலாந்துதேச இராசப் பிரபு குலத்தில் பிறந்த பிள்ளை ஒருவன் இருந்தான் சிறுவயதிலிருந்தே பக்தி விசுவாசமுள்ளவன் இவ்வுலக பொருள்களை விழலென்றெண்ணி அலட்சியம்செய்தவன். 15 பிராயமானதும் தனது சொத்துச் சுதந்தரங்கள் யாவற்றையும் துறந்து சந்நியாசசபையில் தரித்திர சீவியம் சீவிக்கநேர்ந்து கொண்டான். இதனை அறிந்த பிரபுகுல வாலிப நண்பர் அவனிடம்சென்று: "தம்பி, நீஇராச பிரபு குலத்தில் உதித்தவன்; அதோ பார், உனக்குச் சொந்தமான மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், கண்ணுக்கெட்டாததூரம் அகன்று விரிந்து பரந்துகிடக்கும் பூஸ்திதி! திரளான திரவியம்! இவையெல்லாம் உன்னுடையவை. இவ்வளவு சுகபோகங்களை மனங்கொண்டவரை அனுபவித்து இவ்வுலகில் உற்ருர் உறவினருடன் சொகுசாய் வாழலாமே" என்றனர். அப்போது இளைஞன்: "நண்பர்காள், வாஸ்தவம்; எனக்கு ஏராளமான சம்பத்து உண்டுதான்; ஆனுல், இவ்வுலக பாக்கியங்கள் யாவும் பகட்டானவை, அழிவுக்குரியவை; பரலோக பாக்கியத்துக்குமுன் இவைகளெல்லாம் விழலுக்குச் சமானம்; இவ்வுலகில் நமது நல்லதந்தையாகிய சர்வேசுரனை அறிந்து நேசித்துச் சேவித்து மறுவுலகில் அவரை நித்தியத்துக்கும் சுகித்தநுபவிப்பதே மனிதனுடைய இலட்சியம்; இதுவே மானிட சீவியத்தின் மகத்தான பாக்கியம்! நானே இம்மகத்தான சொத்துக்களைச் சுகித்தநுபவிக்கப்பிறந்தவன்" என்று பதிலிறுத்தான். இந்தப் பையன் தனது 17-ம் பிராயத்தில் தாய்தந்தையர், உற்ருர் உறவினர், உலகசுகபோகங்கள் யாவற்றையும் விட்டொழித்து, யேசுசபையில் சேர்ந்து நவசந்நியாசியாகி மோட்ச பாக்கியம் பெற்றன். திருச்சபை இந்த இளைஞனுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டமளித்து இவரை வாலிபருக்குப் பாதுகாவலனுக நியமித்திருக்கிறது. இந்த அர்ச்சியசிஷ்ட வாலிபனின் நாமம் ஸ்தனிஸ்லாஸ் கோஸ்றகா.

—✻—

## புன்னகைபூத்த அன்னை

"எனது அன்னைதான் உலகிலேயே மிகமகிழ்ச்சியுள்ள ஒரு அன்னை" எனத் தன்தாயிடம் கூறினுன் சிறுவன் போல். "ஏனெனில், மற்ற அன்னையர்களைவிட நீங்கள் எப்போதும் புன்னகையுடன் காட்சியளிக்கிறீர்கள்."

ஆம், சிறுவன் மொழிந்தவை உண்மையே. புன்னகையைப் பொன்னகையாகக்கொண்ட உத்தமி அவனின் அன்னை எக்காலமும் எக்காரணத்துக்காவது அவள் தன்முகத்தைக் கடூரமாகக் காட்டமாட்டாள். தன் மகன் தவறுசெய்யினும் புன்னகையுடனேயே தண்டிப்பாள் அக்குணவதி.

ஆயின், "புன்னகையுடன் காணப்படும் இன்னேர் அன்னையும் உண்டு. அவள்தான் தேவஅன்னை. பரலோகத்தில் இருந்துகொண்டே நல்லவிதமாக நடக்கும் சிறுவர்களைப் பார்த்துப் புன்னகை செய்கிருள்" எனக் கூறினுள் போலின் அன்னை.

ஓர்நாள் போல் விளையாடிவிட்டு வீட்டுக்கு வந்தபோது ஓர் துக்ககரமான சம்பவம் அவனைக் காத்திருந்தது. அதுயாதெனில் அவனது அன்னையின் வதனத்தில் என்றும் இல்லாத கவலைக்குறி காணப்பட்டது. வழக்கமாகக் காணப்படும் புன்னகையைக் காணுத சிறுவன் வருத்தத்தோடு அதுபற்றி விணுவினுன்.

"எனக்கு ஒரு கவலையுமில்லை; நீ போய் விளையாடு" என்று புன்னகையுடன் கூறினுள் அன்னை. ஆயினும் அது வலிந்திழுத்த புன்னகைதான். ஏனெனில், அவளின்குரல் தழுதழுத்தது.

"அம்மா! நீ அழுதாயா?"

"போடா, சின்னப்பயலே; நான் என்ன குழந்தையா அழுவதற்கு."

அன்னையின் ஆணைக்குக் கீழ்ப்படிந்த சிறுவன் தோட்டத்திற்குச் சென்ருன். அவனின் மனமோ தன் அன்னையின் கவலையைப் போக்குவதெப்படியெனப் பலவாறு சிந்தித்தது. திடீரென மகிழ்ச்சியோடுஎழுந்தான் போல். "தோட்டத்திலுள்ள களைப்பூண்டுகளனைத்தையும் களைந்தெறிவேன் இது என் அன்னையைப் புன்னகைகொள்ளச் செய்யும்."

போல் உக்கிராண அறைக்குச் சென்று ஓர்மண்வெட்டியையும், பிக்கானையும்எடுத்துக்கொண்டு மறுபடியும் தோட்டத்துக்குச் சென்ருன். அங்கு தன் தந்தை வேலை செய்வதைப்போல, களைப்பூண்டுகளை அகற்றத் தொடங்கினுன். சிலபூண்டுகள் மிகஆழமாக வேரூன்றியிருந்தமையால் அவற்றைக் களைவது மிகவும் கஷ்டமாயிருந்தது. ஆயினும், அன்னைக்காக அக்கஷ்டங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டான் போல்.

இவ்விதம் செடிகளைக்கொத்தி அப்புறப்படுத்தும் வேலையிலீடுபட்டிருந்தவேளை ஒருசெடியினருகில் ஏதோ மின்னுவதைக் கண்டான். உடனே அச்செடியினருகில் சென்று அதனைச் சுற்றியிருந்தமண்ணைத் தன்சிறுகரங்களால் அப்புறப்படுத்தியபின் அப்பொருளைக் கையிலெடுத்தான். அது ஓர் தங்கமோதிரம்.

"அம்மா, அம்மா, இதைப் பார்" எனக் கத்திக்கொண்டே தாயிடம் சென்று அதைக் கொடுத்தான் போல். தாய் ஆச்சரியத்துடன்


( அடுத்தபக்கம் பார்க்க )

## பசி

ஒருவீட்டில் ஒரு பூனை நள்ளிரவுவரை எவ்வித உணவுமில்லாமல் பசியால் வாடியது. அதன்கண்களுக்கு ஓர் எலிகூட அகப்படவில்லை.

"கல்லினுட் தேரைக்கும், கருப்பை உயிர்கட்கும் நல்லுணவு கொடுப்பவனுமே இறைவன். இன்றிரவெல்லாம் நானும் இந்த அறையினுள் சுற்றுகிறேன்; ஒரு பூச்சிபுழுவைக்கூடக் காணவில்லையே. என்னே! கருணையற்ற கடவுள்" என்று அலுத்துக் கொண்டது.

சிறிதுநேரத்தில் ஒருபெரியபல்லி அந்தப்பக்கம் வந்தது. பூனைக்கு ஒரே ஆனந்தம்! "என்தவறுதான். ஆமாம். இறைவன் கருணையுள்ளவன். நீதிமான், அருட்பெருங்கடல்" கூறினுயே இறைவன் கருணையுள்ளவன், நீதிமான் என்றெல்லாம்! உன்னையும்படைத்து உனக்குஇரையாக என்னையும் படைத்தானே; அவனு கருணையுள்ளவன். நாமெல்லாரும் ஜீவராசிகள். இறைவனிடத்தில் கருணையும், நீதியும் இல்லாவிட்டாலும் நம்மிடமாவதுகொஞ்சம்வேண்டும். மனிதன் மனிதனை ஏமாற்றிக் கொலைசெய்து வாழ்வதுபோல நாமும் ஒருவரையொருவர் சொன்ருல் வாழ்நாள் முழுவதுமே நிம்மதியாக வாழப்போகிருேமா என்ன? நான் உனக்கு ஒரு அற்பபிராணி. நம்மிடையே கொஞ்சமாவது நீதி, அன்பு, கருணை என்றில்லாவிட்டால் நாம் உயிர்வாழ்வதால் என்னபயன். இனிமேல்என்போன்ற உயிரினங்களைக் கொல்லாதே" என்று கூறியது.



சற்று நேரத்தில் பல்லியின் வாயருகே ஒருபூச்சி பறந்துவந்தது. அடுத்தகணம் பல்லி வாயைத் திறந்து 'ஹபக்' என்று அதை விழுங்கிவிட்டது இதைக் கண்ட பூனை "சரி என்று கூறிக்கொண்டு ஒரேதாவில் அந்தப்பல்லியைப் பிடித்துக்கொண்டது. பூனையின் முன்னங்கால்களுக்கிடையில் அகப்பட்டுக்கொண்ட பல்லிக்கும், அதன் வாய்க்குமிடையே அரை அல்லது முக்கால் அங்குல இடைவெளிதான் இருந்தது. பல்லி உயிருக்காகப் பதறியது. "இறைவன் எவ்வளவு கருணையற்றவன். என்னையும்படைத்து, இக்கொடிய பூனையையும் படைத்தானே" என்று முணுமுணுத்தது பல்லி.

அதற்குப் பூனை, என்னப்பா பேசுகின்ருய்? உனது இறுதி வார்த்தைகளைக் கொஞ்சம் விளங்கக் கூறேன்" என்றது. அதற்குப்பல்லி, "என்னத்தைக்கூறஐயா! நீதான் சற்றுமுன்பு தான் போ! இதற்கிடையில் நீயே உன்தத்துவத்தை மறந்து விட்டாயே" என்றுகூறிச் சிரித்தது.

'எனக்குக் கடுமையான பசி. ஆகவே, ஒருசிறியபூச்சியைத்தானேபிடித்துச் சாப்பிட்டேன்" என்றது பல்லி.

"நீயும் எனக்கு ஒருசின்னப் பூச்சிதான். எனக்கும் கடுமையான பசி. அதனுலேதான் உன்னைச் சாப்பிடப் போகிறேன்" என்று கூறிக்கொண்டு பல்லியை ஒரேகடியில் கடித்துவிழுங்கியது பூனை. — ஏ எஸ். ஏ.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல். — அர்ச். பிராஸ்சீஸ் சேல்ஸ்

## புன்னகைபூத்த அன்னை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கினுள். அவளின் வதனத்தில் இழந்த புன்னகையை மீண்டும் கண்டான் போல்.

"இதுஎங்கள் திருமணத்தின்போது உனதுஅப்பா எனக்குஅணிந்த மோதிரம். இதை இன்றுகாலை எங்கேயோ போட்டுவிட்டேன். இந்தமோதிரம் திரும்பஎனக்குக் கிடைக்காதென எண்ணினேன். இதைஎங்கே கண்டெடுத்தாய்?

"தோட்டத்தில் கண்டெடுத்தேன்" என்ருன் போல்.

"ஓகோ, சமையலுக்காகக் காய்கறிகளைப் பிடுங்க நான் சென்றபோது அங்கு விழுந்திருக்க வேண்டும்."

"அம்மா, இன்று உங்கள் முகம் கவலையுடன் காணப்பட்டது இதன் காரணத்தாலா?"

"ஆமாம் கண்னே, உனது அப்பா ஆசையாய்த் தந்த பொருள்இது. என்கையில் இதைக்காணுவிட்டால் அவரின்மனம் மிகவேதனை அடையும்" என்ருள் தாய்.

வழமைபோல அன்னையின்வதனம் புன்னகையால் ஒளிவிடுவதைக் கண்டான் போல். தன் அன்னையின் கவலையைப் போக்கிய பெருமையால் அவனதுவதனமும் பிரகாசித்தது.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1891**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

பத்தைமேனி
தற்காலம் கொழும்பு
1. அல்பேர்ட் லயோனல் பெனடிற்றும்,
2. பெண் மேரி பிலோமினுவும்

எதிராக, அச்சுவேலி தெற்கு
முருகர் வைத்தியலிங்கம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 1891-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1959-ம்ஆண்டு புரட்டாதிமாதம் 10ஆம் திகதி (10-9-59) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில்விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 980. இன்னும் ரூபா500-க்கு 17-10-1957 தொடக்கம் 31-3-58 வரையும் 100-க்கு 12% வட்டியும், பின்புகூட்டுத்தொகைக்கு இறுபடும்வலரயும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 162 ச. 57.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, அச்சுவேலிக் கோயிற்பற்று, அச்சுவேலி தெற்கிறை சின்கிரானை உறுதிப்படி, ஆட்சிப்படியும் ப.நி.இ. 50. செய்பயிர்களும், வான்பயிர்களும், கிணறும். இந்தப் பரப்பு ஐம்பதுக்கும்எல்லை: கிழக்கு—கனகசபை ஆறுமுகத்திற்கும், பங்காளருக்கும், முருகன் கந்தையாவிற்கும், பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு—வஸ்தியாம்பிள்ளை சின்னப்புவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு—சூசைப்பிள்ளை யோண் இராசாவின் உரிமைக்காரரின் ஆதனங்கள். தெற்கு—கனகசபை ஆறுமுகத்திற்கும், பங்காளருக்குமுரிய ஆதனங்கள். இதில் சொரியலாய் நி. ப. 35-ம் அதற்குரியவைகளும்.

2. ஷெ அச்சுவேலி தெற்கிறை தனிப்புலம் நி. ப. 3½. எல்லை: கிழக்கு—எதிரியின் ஆதனம். வடக்கும், தெற்கும்—வல்லிபுரம் பெண் சின்னத்தங்கத்திற்கும், பங்காளருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு—தாமு சங்கரப்பிள்ளையினுதனம். இதில் சொரியலாய் அரைவாசியும், தெற்கேயுள்ள கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், வழிவாய்க்காலுரித்தும்.

**தா. செல்லையா,**
கொமிஷனரும், விலமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 30.6-59.




'டெரிலீன்'

— —தூண்டில் நூல்களுக்கும் வலைகளுக்கும்!—

பாவிப்பதற்குப் பாரமில்லாததும் இலகுவானதும்
இழுபடுவது குறைவு
அழுகிவிடாது
ஈரமான வேளையிலும் மிக இறுக்கமானது
சீக்கிரம் உலர்ந்துவிடும் - ஈரமாயிருந்தாலும்
பாரமாயிராது
சூரிய வெப்பத்தை எதிர்க்கும்

'TERYLENE'
Polyester ICI Fibre

இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போர்ட்) லிமிட்டெட்
(இம்பீரியல் கெமிககல் இன்டஸ்டரீஸ் லிமிட்டெட்டின் துணைக் கம்பெனி)
(இங்கிலாந்தில் அமைக்கப்பெற்று அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
த. பெட்டி 352 கொழும்பு.

8T-ICI-T-309


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2289**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு
1. பொன்னையா இராசரெத்தினமும்,
2. மனைவி மீனுட்சிப்பிள்ளையும்

— வழக்காளிகள்.

எதிராக
யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு,
11, மொகிதீன் மசூதி வீதி
1. இறந்த மீராசாகிப்சாகூல் கமீட்டும்,
2. மனைவி நசீவா இருவரும்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2289-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1959-ம்ஞு ஆகஸ்ட் (ஆவணி) மீ 22-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 810. மேலும் 500 ரூபாவுக்கும் 23-6-58 திகதி தொடக்கம், 13-2-59 வரைக்கும் வருடமொன்றுக்கு 12% வட்டியும், அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும், 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 188-26 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "தேற்றுவத்தை" நிலப் பரப்பு $2\frac{5}{8}$. இதில் தெற்குப்பகுதியாக நிலப்பரப்பு $1\frac{1}{8}$. பனைகளும் தென்னைமரங்களும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இந்த நிலப்பரப்பு $1\frac{1}{8}$ க்கு எல்லை: கிழக்கு—மொகிதீன் பிச்சை அசனு மரிக்கரும், பங்காளர்களுக்குமுரிய ஆதனமும், ஒழுங்கையும். வடக்கு—இந்த ஆதனத்தின் மீதப்பங்கு. மேற்கு—மக்கீர் மொகிதீன் அசனு லெவ்வைக்குரிய ஆதனம். தெற்கு—மொகிதீன் பிச்சை அசனு மரிக்காரரினதும், பங்காளர்களுக்குமுரிய ஆதனம். இந்த நிலப்பரப்பு $1\frac{1}{8}$-ல் சொரியலாய் அரைவாசிப் பங்கு. பதிவு இல. D. 222/232.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.
643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை.

● கொலைக்குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவரும், விருதுநகரைச்சேர்ந்தவருமான ஏசுக்கண்ணுஎன்பவர் தான்தூக்கிலிடப்பட்டு மரணமானபின் தனதுகண்களை எடுத்துக் கண்வங்கிக்கு அனுப்புமாறு சென்றமாதம் ஓர்மரணசாதனம் எழுதியிருந்தார். அதனுல் அவர் மதுரை மத்தியசிறையில் தூக்கிலிடப்பட்டு இறந்ததும் டக்றர்மார் அவரதுஇரு கண்களையும் பெயர்த்தெடுத்து எர்ஸ்கின் ஆஸ்பத்திரியிலுள்ள கண்வங்கிக்கு அனுப்பிவைத்தார்கள்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 25-ந் திகதி சனிவாரம் பி. ப. 4மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றுலயத்தில் நடைபெறும். அவ்வேளை நான்கு சகோதரரும், ஒரு சகோதரியும் தமது நவாப்பியாசகாலத்தை முடித்து வாக்குத்தத்தமெடுப்பார்கள். அன்று, ஆடம்பரமான கூட்டமாயிருப்பதால், எல்லோரும் தமது உடுப்புகளைக் கொண்டுவரும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். பி. ப. 3-30மணிக்குப் பகுதித்தலைவர்மார் சங்கமிருக்கும். ஆகவே, தலைவர்கள் நேரகாலத்தோடுசமுகமாயிருக்கவேண்டியது அவசியம்.

**A. S. Francis of Mary,**
தலைவர்.

● தென்னமெரிக்கநாடுகளிலே குருமார்அருந்தலாயிருக்கும் காரணமாக ஸ்பானியதேச பம்புளோனு மேற்றிராசனத்திலிருந்து 20மேற்றிராசனகுருமாரும், விற்ருேறியா மேற்றிராசனத்திலிருந்து 20குருமாரும் இவ்வருடத்திலே அங்குசென்றிருக்கிருர்கள். அங்கேஇவர்கள் ஐந்துவருடகாலம் தொண்டாற்றிவருவார்கள்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 23-1959.